# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

## ஆயுள்வேதம் (திருத்தம்)

***1961 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க, ஆயுள்வேதச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்***

*சுகாதார அமைச்சர் அவர்களால் 2023, யூலை மாதம் 05 ஆம் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டது*

*(2023, யூன் மாதம் 12 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது

[ ***184 ஆம் சட்டமூலம்*** ]

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 78.00** **தபாற் செலவு : ரூபா 150.00**

*இச்சட்டமூலத்தை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## சட்டப்பயன் பற்றிய கூற்று

***வாசகம் 2***: (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) *1961* ஆம் ஆண்டின் *31* ஆம் இலக்க, ஆயுள்வேதச் சட்டத்தின் விரிவுப் பெயரை மாற்றீடு செய்கின்றதுடன் திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது பின்வருவனவற்றை ஏற்பாடுசெய்வதற்குமாகும் -

(அ) ஆயுள்வேத மருத்துவம் மற்றும் அறுவைச்சிகிச்சை துறையிலுள்ள உயர்தொழிலர்களின் குறித்தசில வகுதிகளையும் அத்தகைய உயர்தொழில்கள் மற்றும் செயற்பாடுகளைப் பதிவுசெய்வதற்கான தேவைப்பாடொன்றை எடுத்துக்காட்டுவதன்மூலம் சட்டத்தின்கீழ் நிறைவேற்றப்படும் குறித்தசில செயற்பாடுகளையும் ஒழுங்குபடுத்துவதற்காக;

(ஆ) சட்டத்தின்கீழ் அங்கீகரிக்கப்பட்ட கற்கைநெறிகளின் வகைகளை விரிவாக்குவதற்காக; அத்துடன்

(இ) ஆயுள்வேத வைத்தியசாலைகள் மீள் தரப்படுத்துதலுக்காக.

***வாசகம் 3***: இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் குறித்தசில சொற்களின் மற்றும் வாசகங்களின் பொதுத்திருத்தங்களை ஏற்பாடுசெய்கின்றதுடன் வேறு எழுத்திலான சட்டங்கள் மற்றும் ஆவணங்கள் பற்றிய அத்தகைய புதிய சொற்கள் மற்றும் வாசகங்களின் சட்டப்பயனை எடுத்துக் கூறுவதற்கானதுமாகும்.

***வாசகம் 4***: இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் *3* ஆம் பிரிவைத் திருத்துகின்றதுடன் திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது ஆயுள்வேத ஆணையாளர் எனும் பதவியை மற்றும் உத்தியோகத்தர்களுக்கு புதிய தரப்படுத்தல்களை அறிமுகப்படுத்துவதற்கானதாகும்.

***வாசகம் 5***: இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் பிரிவு *4* இனைத் திருத்துகின்றதுடன் வாசகம் *3* இனால் செய்யப்பட்ட திருத்தத்துக்கான விளைவாந்தன்மையினவாகும்.

***வாசகம் 6***: இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் பிரிவு 5 இனைத் திருத்துகின்றதுடன் வாசகம் *3* இனால் செய்யப்பட்ட திருத்தத்துக்கான விளைவாந்தன்மையினவாகும்.

***வாசகம் 7***: இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் பிரிவு *7* இனை மாற்றீடு செய்கின்றதுடன் மாற்றீடு செய்யப்பட்டதான பிரிவின் சட்டப்பயனானது சட்டத்தின் குறிக்கோள்களை மீள வகுத்தமைப் பதற்குமானதாகும்.

***வாசகம் 8***: இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் புதிய பிரிவு *7*அ என்பதனை உட்புகுத்து கின்றதுடன் புதிய பிரிவின் சட்டப்பயனானது திரட்டு நிதியத்திலிருந்து மானியக் கொடைகளை வழங்குதலும் திரட்டு நிதியத்துக்கு பணங்களை வரவுவைக்கப்படுவதற்கானதுமாகும்.

***வாசகம் 9***: இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் *8* ஆம் பிரிவைத் திருத்துகின்றதுடன் ஆயுள்வேத ஆணையாளர் தலைமையதிபதியின் நோக்கெல்லையின் கீழ் ஆராய்ச்சிக்கும் மற்றும் விரிவாக்கத்துக்குமான மூலிகைத் தோட்டங்களை கொண்டுவருவதற்கானதாகும்.

***வாசகம் 10***: இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் பிரிவு *10* இனைத் திருத்துகின்றதுடன் வாசகம் *3* இனால் செய்யப்பட்ட திருத்தத்துக்கான விளைவாந்தன்மையினதுமாகும்.

***வாசகம் 11***: இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் *11* ஆம் பிரிவினைத் திருத்துகின்றதுடன் திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது ஆயுள்வேத மருத்துவப் பேரவையின் அமைப்பை மீளக் கட்டமைப்பதற்கானதாகும்

***வாசகம் 12***: இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் *12* ஆம் பிரிவினைத் திருத்துகின்றதுடன் பிரிவு *11* இற்குச் செய்யப்பட்ட திருத்தத்துக்கான விளைவாந்தன்மையினதுமாகும்.

***வாசகம் 13***: இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் *13* ஆம் பிரிவை மாற்றீடு செய்கின்றதுடன் *11* ஆம் பிரிவுக்குச் செய்யப்பட்ட திருத்தத்துக்கான விளைவாந்தன்மையினதுமாகும்.

***வாசகம் 14***: இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 16 ஆம் பிரிவைத் திருத்துகின்றதுடன் திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது ஆயுள்வேத மருத்துவ பேரவையின் கூட்டநடப்பெண்ணை மீள அமைப்பதற்கானதுமாகும்

***வாசகம் 15***: இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 18 ஆம் பிரிவினைத் திருத்துகின்றதுடன் வாசகம் 3 இனால் செய்யப்பட்ட திருத்தத்துக்கான விளைவாந்தன்மையினதுமாகும்.

***வாசகம் 16***: இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 22 ஆம் பிரிவைத் திருத்துகின்றதுடன் திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது ஆயுள்வேத கல்வி மற்றும் வைத்தியசாலை சபையின் அமைப்பை மீளக் கட்டமைப்பதற்கானதுமாகும்.

***வாசகம் 17***: இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 23 ஆம் பிரிவினைத் திருத்துகின்றதுடன் 22 ஆம் பிரிவுக்குச் செய்யப்பட்ட திருத்தத்துக்கான விளைவாந்தன்மையினதுமாகும்.

***வாசகம் 18***: இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 24 ஆம் பிரிவினைத் திருத்துகின்றதுடன் 22 ஆம் பிரிவுக்குச் செய்யப்பட்ட திருத்தத்துக்கான விளைவாந்தன்மையினதுமாகும்.

***வாசகம் 19***: இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 27 ஆம் பிரிவைத் திருத்துகின்றதுடன் திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது ஆயுள்வேத கல்வி மற்றும் வைத்தியசாலை சபையின் கூட்டநடப்பெண்ணை மீளமைத்தலுக்கானதுமாகும்.

***வாசகம் 20***: இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 30 ஆம் பிரிவைத் திருத்துகின்றதுடன் பிரிவின் சட்டப்பயனானது ஆயுள்வேத கல்வி மற்றும் வைத்தியசாலை சபையின் தத்துவங்களை விரிவாக்குவதற்குமானதுமாகும்.

***வாசகம் 21***: இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 33 ஆம் பிரிவைத் திருத்துகின்றதுடன் திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது ஆயுள்வேத ஆராய்ச்சிக் குழுவின் அமைப்பை மீளக் கட்டமைப்பதற்கானதுமாகும்.

***வாசகம் 22***: இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 38 ஆம் பிரிவைத் திருத்துகின்றதுடன் பிரிவின் சட்டப்பயனானது ஆயுள்வேத ஆராய்ச்சிக் குழுவின் கூட்டநடப்பெண்ணை மீளமைப்பதற்கானதாகும்.

***வாசகம் 23***: இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 41 ஆம் பிரிவைத் திருத்துகின்றதுடன் திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது அதன்கண் குறிப்பீடு செய்யப்பட்ட கருமங்கள் தொடர்பில் கட்டணங்கள் அறவிடச்செய்வதற்கு இயலச்செய்வதன் மூலம் பிரிவின் பரப்பெல்லையை விரிவாக்குவதற்கானதாகும்.

***வாசகம் 24***: இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 51 ஆம் பிரிவைத் திருத்துகின்றதுடன் திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது ஆலோசக வைத்தியர்களுக்கான புதிய இடாப் பொன்றை அறிமுகப்படுத்துவதன் மூலம் இப்பிரிவின் பரப்பெல்லையை விரிவாக்குவதற்கானதுமாகும்.

***வாசகம் 25***: இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 52 ஆம் பிரிவினைத் திருத்துகின்றதுடன் பிரிவு 51 இற்குச் செய்யப்பட்ட திருத்தத்துக்கான விளைவாந்தன்மையினதுமாகும்.

***வாசகம் 26***: இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 53 ஆம் பிரிவினைத் திருத்துகின்றதுடன் பிரிவு 18 இற்குச் செய்யப்பட்ட திருத்தத்துக்கான விளைவாந்தன்மையினதுமாகும்.

***வாசகம் 27***: இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 54 ஆம் பிரிவினைத் திருத்துகின்றதுடன் அது முதன்மைச் சட்டவாக்கத்தின் பிரிவு 18 இற்குச் செய்யப்பட்ட திருத்தத்துக்கான விளைவாந்தன்மை யினதுமாகும்.

***வாசகம் 28***: இவ்வாசகம் இப்பிரிவின் எல்லையை விரிவாக்குவதன்மூலம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 53 ஆம் பிரிவைத் திருத்துகின்றது.

***வாசகம் 29***: இவ்வாசகம் இப்பிரிவின் பரப்பெல்லையை விரிவாக்குவதன்மூலம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 56 ஆம் பிரிவைத் திருத்துகின்றது.

***வாசகம் 30***: இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 57 ஆம் பிரிவைத் திருத்துகின்றதுடன் அது முதன்மைச் சட்டவாக்கத்தின் பிரிவுகள் 55 மற்றும் 56 இற்குச் செய்யப்பட்ட திருத்தங்களுக்கான விளைவாந்தன்மையினதாகும்.

***வாசகம் 31***: இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 58 ஆம் பிரிவினைத் திருத்துகின்றதுடன் அது முதன்மைச் சட்டவாக்கத்தின் பிரிவு 18 இற்குச் செய்யப்பட்ட திருத்தத்துக்கான விளைவாந்தன்மை யினதுமாகும்.

***வாசகம் 32***: இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 59 ஆம் பிரிவைத் திருத்துகின்றதுடன் அது முதன்மைச் சட்டவாக்கத்தின் பிரிவுகள் 18 மற்றும் 51 இற்குச் செய்யப்பட்ட திருத்தங்களுக்கான விளைவாந்தன்மையினதாகும்.

***வாசகம் 33***: இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 60 ஆம் பிரிவைத் திருத்துகின்றதுடன் திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது ஆயுள்வேத மருத்துவப் பேரவை, ஆயுள்வேத கல்வி மற்றும் வைத்தியசாலை சபை மற்றும் ஆயுள்வேத ஆராய்ச்சிக் குழுவினால் கட்டணங்களை அறவிடுவதற்கான ஏற்பாடுகளை இயலச் செய்கின்றதனை அறிமுகப்படுத்துவதன் மூலம் இப்பிரிவின் பரப்பெல்லையை விரிவாக்குவதற்கானதாகும்.

***வாசகம் 34***: இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 61 ஆம் பிரிவினைத் திருத்துகின்றதுடன் அது முதன்மைச் சட்டவாக்கத்தின் 18 ஆம் பிரிவுக்குச் செய்யப்பட்ட திருத்தத்துக்கான விளைவாந்தன்மை யினதாகும்.

***வாசகம் 35***: இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 62 ஆம் பிரிவைத் திருத்துகின்றதுடன் அது முதன்மைச் சட்டவாக்கத்தின் பிரிவுகள் 18 மற்றும் 51 இற்குச் செய்யப்பட்ட திருத்தத்துக்கான விளைவாந்தன்மையினதாகும்.

***வாசகம் 36***: இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 63 இனைத் திருத்துகின்றதுடன் அது முதன்மைச் சட்டவாக்கத்தின் பிரிவுகள் 18 மற்றும் 51 இற்குச் செய்யப்பட்ட திருத்தத்துக்கான விளைவாந்தன்மையினதாகும்.

***வாசகம் 37***: இவ்வாசகம் இப்பிரிவின் பரப்பெல்லையை விரிவாக்குவதன்மூலம் முதன்மைச் சட்டவாக்கத்தின் பிரிவு 66 இனைத் திருத்துகின்றது.

***வாசகம் 38***: இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 69 ஆம் பிரிவினைத் திருத்துகின்றதுடன் அது முதன்மைச் சட்டவாக்கத்தின் 51 பிரிவுக்குச் செய்யப்பட்ட திருத்தத்துக்கான விளைவாந்தன்மை யினதாகும்.

***வாசகம் 39***: இவ்வாசகம் இப்பிரிவின் பரப்பெல்லையை விரிவாக்குவதன்மூலம் முதன்மைச் சட்டவாக்கத்தின் பிரிவு 70 இனைத் திருத்துகின்றது.

***வாசகம் 40***: இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 71 ஆம் பிரிவைத் திருத்துகின்றதுடன் திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது இப்பிரிவின் தவறுகள் தொடர்பில் ஏற்பாடுகளின் நோக்கெல்லையை விரிவாக்குவதற்கும் அத்தகைய ஏற்புடமையின் விலக்களிப்பதற்குமானதுமாகும்.

***வாசகம் 41***: இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 72 ஆம் பிரிவைத் திருத்துகின்றதுடன் அது முதன்மைச் சட்டவாக்கத்தின் பிரிவு 18 இற்குச் பிரிவுக்குச் செய்யப்பட்ட திருத்தத்துக்கான விளைவாந்தன்மையினதுமாகும்.

***வாசகம் 42***: இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 77 ஆம் பிரிவைத் திருத்துகின்றதுடன் திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது அப்பிரிவின் ஏற்பாடுகளின் நோக்கெல்லையை விரிவாக்குவதற்கானதாகும்.

***வாசகம் 43***: இவ்வாசகம் *முதன்மைச் சட்டவாக்கத்தின் 79 ஆம் பிரிவைத் திருத்துகின்றதுடன் திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது அதன் தவறு தொடர்பிலான ஏற்பாடுகளின் நோக்கெல்லையை விரிவாக்குவதற்கானதுமாகும்.*

***வாசகம் 44***: இவ்வாசகம் *முதன்மைச் சட்டவாக்கத்தின் 80 ஆம் பிரிவைத் திருத்துகின்றதுடன் திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது தவறுகள் மற்றும் தண்டங்கள் தொடர்பில் ஏற்பாடுகளின் நோக்கெல்லையை விரிவாக்குவதற்கானதுமாகும்.*

***வாசகம் 45***: இவ்வாசகம் *முதன்மைச் சட்டவாக்கத்தின் 83 ஆம் பிரிவைத் திருத்துகின்றதுடன் திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது இப்பிரிவின் நோக்கெல்லையை விரிவாக்குவதற்காகும்.*

***வாசகம் 46***: சொல்லமைப்பின் புதிய வரைவிலக்கணங்களை அறிமுகப்படுத்துவதனைப் போன்று ஏலவேயுள்ள குறித்தசில சொல்லமைப்பின் வரைவிலக்கணங்களை மாற்றீடு செய்வதன்மூலம் *முதன்மைச் சட்டவாக்கத்தின் 89 ஆம் பிரிவைத் திருத்துகின்றது.*

ச. வ.- ஓ. 39/2022

## 1961 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க, ஆயுள்வேதச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

*சுருக்கப் பெயர்*

**1.** இச்சட்டம், 2023 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, ஆயுள்வேத (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

*1961 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க, ஆயுள்வேதச் சட்டத்துக்கான விரிவுப்பெயரை மாற்றீடு செய்தல்*

**2.** (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) 1961 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க, ஆயுள்வேதச் சட்டத்தின் விரிவுப்பெயர் இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் விரிவுப்பெயர் இடப்படுகின்றது:-

"ஆயுள்வேத திணைக்களமொன்றைத் தாபிப்பதற்கும்; ஆயுள்வேத வைத்தியசாலைகள், ஆயுள்வேத வாகடகங்கள், ஆயுள்வேத மருந்தகங்கள், ஆயுள்வேத களஞ்சியங்கள், மூலிகைப் பயிர்ச்செய்கைகள் மற்றும் ஆராய்ச்சிக்கும் விரிவாக்கலுக்குமான மூலிகைத் தோட்டங்கள் என்பவற்றைப் பதிவுசெய்வதற்கும்; ஆயுள்வேத மருத்துவத் தொழிலர்கள், ஆயுள்வேத வாகடகர்கள், ஆயுள்வேத தாதியர் மற்றும் ஆயுள்வேத ஆண் உடற்பிடிப்பாளர் மற்றும் பெண் உடற்பிடிப் பாளர் என்போரைப் பதிவுசெய்வதற்கும் மற்றும் அவர்களின் உயர்தொழில்சார் நடத்தையுடன் தொடர்புடைய கருமங்களைக் கையாள்வதற்குமான ஆயுள்வேத மருத்துவப் பேரவை யொன்றைத் தாபிப்பதற்கும்; திப்புளோமாக்கள், சான்றிதழ் கள், பட்டங்கள் மற்றும் பட்டப்பின்படிப்புப் பட்டங்களை வழங்குதல் தொடர்பாகவும் மற்றும் ஆயுள்வேதத்திலான கல்வி மற்றும் பயிற்சி தொடர்பாகவுமுள்ள குறித்தசில பணிகளை நிறைவேற்றுவதற்கு ஆயுள்வேத கல்வி மற்றும் வைத்தியசாலை சபையொன்றைத் தாபிப்பதற்கும்; மற்றும் ஆயுள்வேத தேசிய வைத்தியசாலை, ஆயுள்வேத போதனா வைத்தியசாலைகள், ஆயுள்வேத ஆராய்ச்சி வைத்தியசாலை கள் அத்துடன் அவற்றுடன் இணைக்கப்பட்ட வாகடகங்கள்,

மூலிகையகங்கள் மற்றும் மருந்தகங்கள் தொடர்பான கருமங்களைக் கையாள்வதற்கும்; ஆயுள்வேதத்திலான ஆராய்ச்சி தொடர்பில் குறித்தசில பணிகளை நிறைவேற்று வதற்கு ஆயுள்வேத ஆராய்ச்சிக் குழுவொன்றைத் தாபிப்பதற்கும்; (106 ஆம் அத்தியாயமான) சுதேச மருத்துவக் கட்டளைச்சட்டத்தையும் மற்றும் (279 ஆம் அத்தியாயமான) ஆயுள்வேத மருத்துவப் பேரவைக் கட்டளைச்சட்டத்தையும் நீக்குவதற்கும்; (105 ஆம் அத்தியாயமான) மருத்துவக் கட்டளைச்சட்டம், (218 ஆம் அத்தியாயமான) நஞ்சுகள், அபின் மற்றும் அபாயகரமான ஔடதங்கள் கட்டளைச்சட்டம் மற்றும் (216 ஆம் அத்தியாயமான) உணவு மற்றும் ஔடதங்கள் சட்டம் என்பவற்றில் விளைவாந்தன்மையினவான திருத்தங்களைச் செய்வதற்கு ஏற்பாடு செய்வதற்கும்; மற்றும் அவற்றுடன் தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்கானதுமான ஒரு சட்டம்.".

பொதுவான திருத்தங்கள்

**3.** (1) முதன்மைச் சட்டவாக்கத்திலும் மற்றும் வேறேதேனும் எழுத்திலான சட்டத்திலும், ''ஆயுள்வேத ஆணையாளர்'', "ஆயுள்வேத மருத்துவப் பேரவை", "ஆயுள்வேத வைத்தியசாலைகள்'', ''ஆயுள்வேத வாகடகம்'', ''ஆயுள்வேத வாகடகங்கள்'', "ஆயுள்வேத மருந்தகம்", "ஆயுள்வேத மருந்தகங்கள்", "ஆயுள்வேத களஞ்சியம்", "ஆயுள்வேத களஞ்சியங்கள்", "ஆயுள்வேத மருத்துவத் தொழிலர்கள்", "ஆயுள்வேத வாகடர்கள்", "ஆயுள்வேத தாதியர்", ''ஆயுள்வேத மத்திய வைத்தியசாலை'' மற்றும் ''ஆயுள்வேத ஆராய்ச்சிக் குழு'' என்னும் சொற்களுக்குப் பதிலாக முறையே ''ஆயுள்வேத ஆணையாளர் தலைமையதிபதி'', ''ஆயுள்வேத மருத்துவப் பேரவை'', ''ஆயுள்வேத வைத்தியசாலைகள்'', "ஆயுள்வேத வாகடகம்' 'ஆயுள்வேத வாகடகங்கள்", "ஆயுள்வேத மருந்தகம்', 'ஆயுள்வேத மருந்தகங்கள்", "ஆயுள்வேத களஞ்சியம்", ''ஆயுள்வேத களஞ்சியங்கள்'', ''ஆயுள்வேத மருத்துவத் தொழிலர்கள்", "ஆயுள்வேத வாகடர்கள்", "ஆயுள்வேத தாதியர்", ''ஆயுள்வேத தேசிய வைத்தியசாலை'' மற்றும் ''ஆயுள்வேத ஆராய்ச்சிக் குழு" என்னும் சொற்கள் இடப்படுதல் வேண்டும்.

(2) ஏதேனும் அறிவித்தலில், அறிவிப்பில் அல்லது வேறு ஆவணத்தில் காணப்படுகின்ற, "ஆயுள்வேத ஆணையாளர்", "ஆயுள்வேத மருத்துவப் பேரவை", "ஆயுள்வேத வைத்திய சாலைகள்", "ஆயுள்வேத வாகடகம்", "ஆயுள்வேத வாகடகங்கள்", "ஆயுள்வேத மருந்தகம்", "ஆயுள்வேத மருந்தகங்கள்", "ஆயுள்வேத களஞ்சியம்", "ஆயுள்வேதக் களஞ்சியங்கள்", "ஆயுள்வேத மருத்துவத் தொழிலர்கள்", "ஆயுள்வேத வாகடகர்கள்", "ஆயுள்வேத தாதியர்", "ஆயுள்வேத மத்திய வைத்தியசாலை" மற்றும் "ஆயுள்வேத ஆராய்ச்சிக் குழு" என்பவற்றுக்கான குறிப்பீடு ஒவ்வொன்றும், முறையே "ஆயுள்வேத ஆணையாளர் தலைமையதிபதி", "ஆயுள்வேத மருத்துவப் பேரவை", "ஆயுள்வேத வைத்தியசாலைகள்", "ஆயுள்வேத வாகடகம்", "ஆயுள்வேத வாகடகங்கள்", "ஆயுள்வேத மருந்தகம்", "ஆயுள்வேத மருந்தகங்கள்", "ஆயுள்வேத களஞ்சியம்", "ஆயுள்வேத களஞ்சியங்கள்", "ஆயுள்வேத மருத்துவத் தொழிலர்கள்", "ஆயுள்வேத வாகடகர்கள்", "ஆயுள்வேத தாதியர்", "ஆயுள்வேத தேசிய வைத்தியசாலை" மற்றும் "ஆயுள்வேத ஆராய்ச்சிக் குழு" என்பவற்றுக்கான குறிப்பீடொன்றாக வாசித்துப் பொருளமைத்துக்கொள்ளப்படுதல் வேண்டும்.

(3) முதன்மைச் சட்டவாக்கத்திலுள்ள 3, 4, 6, 8, 9, 10, 11, 13, 15, 22, 23, 24, 26, 33, 34, 35, 37 மற்றும் 75 ஆகிய பிரிவுகளில் "ஆணையாளர்" என்பதற்கான குறிப்பீடு ஒவ்வொன்றும், "ஆயுள்வேத ஆணையாளர் தலைமையதிபதி" என்பதற்கான குறிப்பீடொன்றாக வாசித்துப் பொருளமைத்துக்கொள்ளப்படுதல் வேண்டும்.

(4) முதன்மைச் சட்டவாக்கத்திலுள்ள 11 முதல் 21 வரை, 42, 50 முதல் 63 வரை, 71 மற்றும் 81 ஆகிய பிரிவுகளில், "பேரவை" என்பதற்கான குறிப்பீடு ஒவ்வொன்றும், "ஆயுள்வேத மருத்துவப் பேரவை" என்பதற்கான குறிப்பீடொன்றாக வாசித்துப் பொருளமைத்துக்கொள்ளப்படுதல் வேண்டும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 3 ஆம் பிரிவைத் திருத்துதல்

**4**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 3 ஆம் பிரிவானது, அதன் (2) ஆம் உட்பிரிவிலுள்ள, ‘‘பிரதி ஆயுள்வேத ஆணையாளர்கள்,’’ என்னும் சொற்களுக்குப் பதிலாக, ‘‘மேலதிக ஆயுள்வேத ஆணையாளர் தலைமையதிபதிகள், ஆயுள்வேத ஆணையாளர்கள், பிரதி ஆயுள்வேத ஆணையாளர்கள்,’’ என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 4 ஆம் பிரிவைத் திருத்துதல்

**5**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 4 ஆம் பிரிவானது, ‘‘பிரதி ஆயுள்வேத ஆணையாளர்கள்,’’ என்னும் சொற்களுக்குப் பதிலாக, ‘‘மேலதிக ஆயுள்வேத ஆணையாளர் தலைமையதிபதிகள், ஆயுள்வேத ஆணையாளர்கள், பிரதி ஆயுள்வேத ஆணையாளர்கள்,’’ என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப் படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவைத் திருத்துதல்

**6**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவானது, ‘‘பிரதி ஆயுள்வேத ஆணையாளர்கள்,’’ என்னும் சொற்களுக்குப் பதிலாக, ‘‘மேலதிக ஆயுள்வேத ஆணையாளர் தலைமையதிபதிகள், ஆயுள்வேத ஆணையாளர்கள், பிரதி ஆயுள்வேத ஆணையாளர்கள்,’’ என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படு கின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்

**7**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவு இத்தால் நீக்கப் பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது:-

‘‘சட்டத்தின் குறிக்கோள்கள்

7. பின்வருவன சட்டத்தின் குறிக்கோள்களாதல் வேண்டும்:-

(அ) நோய்களின் சிகிச்சைக்காகவும் மற்றும் பொதுவாக ஆயுள்வேதத்திற்கிணங்க மக்களின் உடநலத்தைப் பேணிக்காப்பதற்கும் மேம்படுத்துவதற்காகவும் அவசியமான தாபனங்களையும் சேவைகளையும் வழங்குதல்;

(ஆ) திணைக்களத்தில் தொழிலில் அமர்த்தப்பட்ட அல்லது தொழிலில் அமர்த்தப்படுவதற்கு முன்மொழியப்பட்ட ஆட்களுக்கு புலமைப்பரிசில்களையும் வேறு வசதிகளையும் வழங்குவதன் மூலமும் மற்றும் ஆயுள்வேதத்திலான கற்கைநெறிகளை வழங்குகின்ற அல்லது ஆய்வுகளில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களுக்கு நிதியுதவியையும் மற்றும் வேறு உதவியையும் வழங்குவதன் மூலமும், ஆயுள்வேதம் பற்றிய கற்கையையும் மற்றும் ஆயுள்வேதத்திலான ஆராய்ச்சியையும் ஊக்குவித்தல்;

(இ) நோய்கள் பற்றிய நுண்ணாய்வுக்கும் மற்றும் ஆயுள்வேதத்திற்கிணங்க பொதுச் சுகாதாரத்தின் முன்னேற்றத்துக்குமான நடவடிக்கைகளை எடுத்தல், மேம்படுத்தல் அல்லது ஊக்குவித்தல்;

(ஈ) எட்டாம் பிரிவின்கீழ் தாபிக்கப்பட்ட ஏதேனும் மூலிகையகத்தின் முகாமைத்துவம்;

(உ) ஆயுள்வேத மருத்துவம் மற்றும் அறுவைச் சிகிச்சை பற்றிய ஒழுங்குமுறையான மற்றும் வினைத்திறனான செயல்முறைகளை உருவாக்குதல் மற்றும் பேணுதல் என்பவற்றின்மூலம் மக்களின் நல்வாழ்வுக்கு ஏற்பாடு செய்தல்;

(ஊ) பதிவுபெற்ற ஆயுள்வேத உயர்தொழிலர்களின் செயல்நிறைவேற்றுகையையும் செயற்பாடுகளையும் ஒழுங்குபடுத்துவதன்மூலம் உயர்ரக உயர்தொழில்சார் நியமங்களை உறுதிப்படுத்தல்;

(எ) திணைக்களத்தினால் 77 ஆம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட கோவையின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதன் மூலம் அல்லது அந்நோக்கத்துக்காக சட்டத்தின் பாகம் VI இன்கீழ் தாபிக்கப்பட்ட ஏதேனும் குழுவுக்கூடாக தரம்வாய்ந்த ஆயுள்வேத பொருட்கள், பதார்த்தங்கள் மற்றும் ஔடதங்களை வழங்குதலும் மற்றும் ஆராய்ச்சிக்கும் விரிவாக்கலுக்குமான எவையேனும் மூலிகைத் தோட்டங்களை அல்லது மூலிகைப் பயிர்ச்செய்கையை முகாமை செய்தலும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 7அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்*

**8**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுவதுடன் அது 7அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும்:-

*"பணங்களை திரட்டு நிதியத்திற்கு வரவு வைத்தலும் மற்றும் திரட்டு நிதியத்திலிருந்து வழங்கப்பட்ட பணங்களைப் பயன் படுத்தலும்*

7அ. (1) காலத்துக்குக் காலம் திரட்டு நிதியத்திலிருந்து வழங்கப்பட்ட பணங்கள் இச்சட்டத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதில் பயன்படுத்தப் படுதல் வேண்டும்.

(2) சட்டத்தில் குறித்துரைக்கப்பட்ட குறிக்கோள்களை நிறைவேற்றுவதிலும் மற்றும் திணைக்களத்தின் பணிகளைப் புரிவதிலும் கட்டணங்கள் என்றவகையில் அல்லது வேறு வகையில் பெறப்பட, அறவிடப்பட அல்லது சேகரிக்கப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் திரட்டு நிதியத்துக்கு வரவுவைக்கப்படுதல் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 8 ஆம் பிரிவைத் திருத்துதல்*

**9**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 8 ஆம் பிரிவானது, "ஆயுள்வேத வைத்தியசாலைகள்," என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஆயுள்வேத வைத்தியசாலைகள், ஆராய்ச்சிக்கும் மற்றும் விரிவாக்கத்துக்குமான மூலிகைத் தோட்டங்கள்," என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 10 ஆம் பிரிவைத் திருத்துதல்*

**10**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 10 ஆம் பிரிவானது, "ஆயுள்வேத வைத்தியசாலைகள்," என்னும் சொற்கள் தோன்றுமிடங்களிலெல்லாம் அச்சொற்களுக்குப் பதிலாக, "ஆயுள்வேத வைத்தியசாலைகள், மூலிகைப் பயிர்ச்செய்கை," என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 11 ஆம் பிரிவைத் திருத்துதல்*

**11**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 11 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) பந்தி (ஆ) இற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும்:-

"(ஆ) இலங்கை கொழும்பு பல்கலைக்கழகத்தின் சுதேச மருத்துவ பீடத்தின் தலைவர் மற்றும் இலங்கை கம்பஹா விக்கிரமாராச்சி சுதேச மருத்துவப் பல்கலைக்கழகத்தின் சுதேச மருத்துவ பீடத்தின் தலைவர் மற்றும் இலங்கை யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் சித்த மருத்துவ அலகின் தலைவர் மற்றும் இலங்கை கிழக்கு பல்கலைக் கழகத்தின் சித்த மருத்துவ அலகின் தலைவர்;";

(2) பந்தி (இ) இற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும்:-

"(இ) இலங்கை கொழும்பு பல்கலைக்கழகத்தின் ஆயுள்வேத மற்றும் யுனானி பிரிவுகளின் சுதேச மருத்துவ பீடத்தின் அலகு அல்லது நிறுவனங்கள் ஒவ்வொன்றினாலும் மற்றும் இலங்கை கம்பஹா விக்கிரமாராச்சி சுதேச மருத்துவப் பல்கலைக் கழகத்தின் சுதேச மருத்துவ பீடத்தினாலும் மற்றும் இலங்கை யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் சித்த மருத்துவ அலகினாலும் மற்றும் இலங்கை கிழக்கு பல்கலைக்கழகத்தின் சித்த

மருத்துவ அலகினாலும் தம்மிடையேயிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட சிரேட்ட விரிவுரையாள ரொருவர் உட்பட ஐந்து உறுப்பினர்கள்;";

(3) பந்தி (ஊ) இன் (i) ஆம் உட்பந்திக்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலமும்:-

"(i) மூன்றுக்கு மேற்படாதோர், ஆயுள்வேத மருத்துவத் தொழிலர்களாகப் பதிவுபெற்றிராதவராயுள்ள சட்டம், நிருவாகம் மற்றும் கணக்கியல் துறை களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ஆட்க ளிடையேயிருந்து அவ்வாறு நியமிக்கப்படுதல் வேண்டும்; அத்துடன்';

(4) பந்தி (ஊ) இனை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியைச் சேர்ப்பதன்மூலமும்:-

"(எ) ஓர் உறுப்பினர், விடயத்துக்கேற்ப, நிதி அல்லது திறைசேரி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சுச் செயலாளரினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்டவாறாக அவ்வாறு நியமிக்கப்படுதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 12 ஆம் பிரிவைத் திருத்துதல்

**12**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 12 ஆம் பிரிவானது, "ஆயுள்வேத மருத்துவக் கல்லூரியின்" என்னும் சொற்களில் தொடங்கி "தகவுடையவராதல் வேண்டும்:" என்பது வரையிலான சொற்களுக்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:-

"ஆணையாளர் தலைமையதிபதி மற்றும் இலங்கை கொழும்பு பல்கலைக்கழகத்தின் சுதேச மருத்துவ பீடத்தின் தலைவர் மற்றும் இலங்கை கம்பஹா விக்கிரமாராச்சி சுதேச மருத்துவப் பல்கலைக்கழகத்தின் சுதேச மருத்துவ பீடத்தின் தலைவர் மற்றும் இலங்கை யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் சித்த மருத்துவ அலகின் தலைவர் மற்றும் இலங்கை கிழக்கு

பல்கலைக்கழகத்தின் சித்த மருத்துவ அலகின் தலைவர் ஆகியோர் தவிர்ந்த பேரவையின் ஒவ்வோர் உறுப்பினரும், அவர் முன்னரே பதவியை வறிதாக்கினாலொழிய, மூன்றாண்டு காலப்பகுதியொன்றுக்குப் பதவிவகித்தல் வேண்டுமென்பதுடன், விடயத்துக்கேற்ப, மீளத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு அல்லது மீள்நியமனத்துக்குத் தகவுடையவராதலும் வேண்டும்:".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 13 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்

**13.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 13 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது:-

"பேரவையின் உறுப்பினர்கள் மூலம் பதவி வறிதாதல்

13. (1) "ஆணையாளர் தலைமையதிபதி மற்றும் இலங்கை கொழும்பு பல்கலைக்கழகத்தின் சுதேச மருத்துவ பீடத்தின் தலைவர் மற்றும் இலங்கை கம்பஹா விக்கிரமாராச்சி சுதேச மருத்துவப் பல்கலைக்கழகத்தின் சுதேச மருத்துவ பீடத்தின் தலைவர் மற்றும் இலங்கை யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் சித்த மருத்துவ அலகின் தலைவர் மற்றும் இலங்கை கிழக்கு பல்கலைக்கழகத்தின் சித்த மருத்துவ அலகின் தலைவர் ஆகியோர் தவிர்ந்த பேரவையின் உறுப்பினரொருவர் -

(அ) அவர் பகிரங்க அலுவலரொருவராக இல்லாதவிடத்து, பேரவையின் தலைவருக்கு அவரது எழுத்திலான பதவிவிலகலை அனுப்புவதன்மேல்; அத்துடன்

(ஆ) அவர் பகிரங்க அலுவலரொருவராக இல்லாதவிடத்து, பேரவையின் அபிப்பிராயத்தில் போதிய சாக்கின்றி பேரவையின் தொடர்ச்சியான மூன்று கூட்டங்களுக்கு சமுகமளிக்காதிருப்பதன் மேல்,

பதவியை வறிதாக்கியுள்ளார் எனக் கருதப்படுதல் வேண்டும்.

(2) ஆணையாளர் தலைமையதிபதியானவர், ஆணையாளர் தலைமையதிபதி என்றவாறான பதவியை வகிப்பதிலிருந்து அவர் இல்லாதொழி வதன்மேல், பேரவையின் உறுப்பினரொருவர் என்றவாறான பதவியை வறிதாக்கியுள்ளாரெனக் கருதப்படுதல் வேண்டும்.

(3) விடயத்துக்கேற்ப, இலங்கை கொழும்பு பல்கலைக்கழகத்தின் சுதேச மருத்துவ பீடத்தின் தலைவர், இலங்கை கம்பஹா விக்கிரமாராச்சி சுதேச மருத்துவப் பல்கலைக்கழகத்தின் சுதேச மருத்துவ பீடத்தின் தலைவர், இலங்கை யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் சித்த மருத்துவ அலகின் தலைவர் அல்லது இலங்கை கிழக்கு பல்கலைக் கழகத்தின் சித்த மருத்துவ அலகின் தலைவர் விடயத்துக்கேற்ப, மேற்கூறப்பட்ட அந்தந்த நிறுவனங்கள் எதனதும் தலைவராகப் பதவிவகிப்ப திலிருந்து அவர் இல்லாதொழிவதன்மேல் பேரவை யின் உறுப்பினரொருவர் என்றவாறான பதவியை வறிதாக்கியுள்ளாரெனக் கருதப்படுதல் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 16 ஆம் பிரிவைத் திருத்துதல்*

**14.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 16 ஆம் பிரிவானது, "ஆறாக இருத்தல் வேண்டும்." என்னும் சொற்களுக்குப் பதிலாக, "பதின் மூன்றாக இருத்தல் வேண்டும்." என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 18 ஆம் பிரிவைத் திருத்துதல்*

**15.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 18 ஆம் பிரிவானது, இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அதன் (ஈ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை உட்புகுத்துவதன்மூலமும்:-

"(ஈஅ) ஆயுள்வேத ஆண் உடற்பிடிப்பாளராக அல்லது பெண் உடற்பிடிப்பாளராக ஆட்களைப் பதிவு செய்தல்.";

(2) அதன் (உ) என்னும் பந்தியில், ''இடைநிறுத்துதல்; அத்துடன்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''இடை நிறுத்துதல்;'' என்னும் சொல்லை இடுவதன்மூலமும்;

(3) அதன் (ஊ) என்னும் பந்தியில் (i) ஆம் உட்பந்தியில், ''ஆயுள்வேத வாகடகர்கள், மற்றும் ஆயுள்வேத தாதியர் கள்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''ஆயுள்வேத வாகடகர்கள், ஆயுள்வேத தாதியர்கள் மற்றும் ஆயுள்வேத ஆண் உடற்பிடிப்பாளர்கள் அல்லது பெண் உடற்பிடிப் பாளர்கள்'' என்னும் சொற்களை இடுவதன்மூலமும்.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 22 ஆம் பிரிவைத் திருத்துதல்*

**16**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 22 ஆம் பிரிவானது, அதன் (1) ஆம் உட்பிரிவில் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) பந்தி (அ) இனை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை உட்புகுத்துவதன்மூலமும்:-

''(அஅ) நிதியமைச்சின் செயலாளரின் பிரதிநிதியொருவர் அல்லது திறைசேரியின் செயலாளர்;''

(2) பந்தி (ஆ) இற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலமும்:-

''(ஆ) இலங்கை கொழும்பு பல்கலைக்கழகத்தின் சுதேச மருத்துவ பீடத்தின் தலைவர், இலங்கை கம்பஹா விக்கிரமாராச்சி சுதேச மருத்துவப் பல்கலைக் கழகத்தின் சுதேச மருத்துவ பீடத்தின் தலைவர், இலங்கை யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் சித்த மருத்துவ அலகின் தலைவர் மற்றும் இலங்கை கிழக்கு பல்கலைக்கழகத்தின் சித்த மருத்துவ அலகின் தலைவர்;'';

(3) பந்தி (ஆ) இனை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை உட்புகுத்துவதன்மூலமும்:-

"(ஆஅ) சுதேச மருத்துவத்திற்கான தேசிய நிறுவகத்தின் தலைவர்;";

(4) பந்தி (இ) இற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும்:-

"(இ) ஆயுள்வேத தேசிய வைத்தியசாலையின் தலைவர்;";

(5) பந்தி (ஈ) இற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும்:-

"(ஈ) உயர்கல்வி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் விதப்புரையின்மேல் அமைச்சரினால் நியமிக்கப்பட்ட உயர்கல்வி அமைச்சின் சிரேட்ட உதவிச் செயலாளர் பதவிவரிசையிலுள்ள அல்லது அதற்கு உயர்வான பதவியொன்றிலுள்ள அலுவலரொருவர்;";

(6) பந்தி (உ) இற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும்:-

"(உ) உயர்கல்வி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் விதப்புரையின்மேல், இலங்கை கொழும்பு பல்கலைக்கழகத்தின் சுதேச மருத்துவ பீடம், இலங்கை கம்பஹா விக்கிரமாராச்சி சுதேச மருத்துவப் பல்கலைக்கழகத்தின் சுதேச மருத்துவ பீடம், இலங்கை யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் சித்த மருத்துவ அலகு மற்றும் இலங்கை கிழக்கு பல்கலைக்கழகத்தின் சித்த மருத்துவ அலகு என்பவற்றின் விரிவுரையாளர்களிடையேயிருந்து அமைச்சரினால் நியமிக்கப்பட்ட ஐந்து உறுப்பினர்கள்;";

(7) பந்தி (ஊ) இற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும்:-

"(ஊ) பந்தி (உ) இன்கீழ் நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள்தவிர, இலங்கை கொழும்பு பல்கலைக்கழகத்தின் சுதேச மருத்துவ பீடம், இலங்கை கம்பஹா விக்கிரமாராச்சி சுதேச மருத்துவப் பல்கலைக் கழகத்தின் சுதேச மருத்துவ பீடம், இலங்கை யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் சித்த மருத்துவ அலகு மற்றும் இலங்கை கிழக்கு பல்கலைக்கழகத்தின் சித்த மருத்துவ அலகு என்பவற்றின் விரிவுரையாளர்களினால் அவர்களிடையேயிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட ஐந்து உறுப்பினர்கள்;";

(8) பந்தி (ஐ) இல், "வேண்டும்; அத்துடன்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "வேண்டும்;" என்னும் சொல்லை இடுவதன்மூலமும்;

(9) பந்தி (ஒ) இல் "இரண்டு உறுப்பினர்கள்." என்னும் சொற்களுக்குப் பதிலாக, "இரண்டு உறுபபினர்கள்; அத்துடன்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

(10) அதன் (ஒ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை உட்புகுத்துவதன்மூலமும்:-

"(ஓ) எந்த அமைச்சருக்கு நிதி என்னும் விடயம் குறித்தளிக்கப்படுகின்றதோ அந்த அமைச்சரின் அமைச்சுச் செயலாளரினால் நியமிக்கப்பட்ட சிரேட்ட உதவிச் செயலாளர் பதவிவரிசைக்குக் குறையாத உறுப்பினரொருவர்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 23 ஆம் பிரிவைத் திருத்துதல்*

**17**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 23 ஆம் பிரிவானது, "சபையின் ஒவ்வோர் உறுப்பினரும்" என்னும் சொற்களிலிருந்து, "தகவுடையவராதல் வேண்டும்:" என்பது வரையிலான சொற்களை நீக்கிவிட்டு அவற்றுக்குப் பதிலாக பின்வருவதனை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:-

''ஆணையாளர் தலைமையதிபதி, இலங்கை கொழும்பு பல்கலைக்கழகத்தின் சுதேச மருத்துவ பீடத்தின் தலைவர், இலங்கை கம்பஹா விக்கிரமாராச்சி சுதேச மருத்துவப் பல்கலைக்கழகத்தின் சுதேச மருத்துவ பீடத்தின் தலைவர், இலங்கை யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் சித்த மருத்துவ அலகின் தலைவர், இலங்கை கிழக்கு பல்கலைக்கழகத்தின் சித்த மருத்துவ அலகின் தலைவர், ஆயுள்வேத தேசிய வைத்தியசாலையின் தலைவர் மற்றும் சுதேச மருத்துவத்திற்கான தேசிய நிறுவகத்தின் தலைவர் தவிர்ந்த சபையின் ஒவ்வோர் உறுப்பினரும், அத்தகைய உறுப்பினர் முன்னரே பதவியை வறிதாக்கினாலொழிய, மூன்றாண்டு காலப்பகுதியொன்றுக்குப் பதவிவகித்தல் வேண்டுமென்பதுடன், விடயத்துக்கேற்ப, மீளத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு அல்லது மீள்நியமனத்துக்குத் தகவுடையவராதலும் வேண்டும்:''.

**18.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 24 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 24 ஆம் பிரிவைத் திருத்துதல்*

(1) அதன் (1) ஆம் உட்பிரிவில், ''ஆணையாளர்,'' என்னும் சொல்முதல் ''உறுப்பினரொருவர்'' என்னும் சொல்வரையிலான சொற்களுக்குப் பதிலாக, ''ஆணையாளர் தலைமையதிபதி, இலங்கை கொழும்பு பல்கலைக் கழகத்தின் சுதேச மருத்துவ பீடத்தின் தலைவர், இலங்கை கம்பஹா விக்கிரமாராச்சி சுதேச மருத்துவப் பல்கலைக் கழகத்தின் சுதேச மருத்துவ பீடத்தினதும், இலங்கை யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் சித்த மருத்துவ அலகினதும், இலங்கை கிழக்கு பல்கலைக்கழகத்தின் சித்த மருத்துவ அலகினதும், ஆயுள்வேத தேசிய வைத்தியசாலையினதும் மற்றும் சுதேச மருத்துவத்திற்கான தேசிய நிறுவகத்தினதும் தலைவர்கள் ஆகியோர் தவிர்ந்த சபையின் உறுப்பினரொருவர்,'' என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

(2) அதன் (3) ஆம் உட்பிரிவுக்குப் பதிலாக பின்வருவதனை இடுவதன் மூலமும்:-

"(3) இலங்கை கொழும்பு பல்கலைக்கழகத்தின் சுதேச மருத்துவ பீடத்தின் தலைவர், இலங்கை கம்பஹா விக்கிரமாராச்சி சுதேச மருத்துவப் பல்கலைக்கழகத்தின் சுதேச மருத்துவ பீடத்தின் தலைவர், இலங்கை யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தின் சித்த மருத்துவ அலகின் தலைவர், இலங்கை கிழக்கு பல்கலைக்கழகத்தின் சித்த மருத்துவ அலகின் தலைவர், விடயத்துக்கேற்ப, இலங்கை கொழும்பு பல்கலைக்கழகத்தின் சுதேச மருத்துவ பீடத்தின், இலங்கை கம்பஹா விக்கிரமாராச்சி சுதேச மருத்துவப் பல்கலைக்கழ கத்தின் சுதேச மருத்துவ பீடத்தின், இலங்கை யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் சித்த மருத்துவ அலகின் அல்லது இலங்கை கிழக்கு பல்கலைக்கழ கத்தின் சித்த மருத்துவ அலகின் தலைவராகப் பதவிவகிப்பதிலிருந்து அவர் இல்லாதொழிக்கப் படுவதன்மேல் சபையின் உறுப்பினரொருவர் என்றவறான பதவியை வறிதாக்கியுள்ளாரெனக் கருதப்படுதல் வேண்டும்.";

(3) அதன் (4) ஆம் உட்பிரிவுக்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும்:-

"(4) ஆயுள்வேத தேசிய வைத்தியசாலையின் தலைவர், அவர் ஆயுள்வேத தேசிய வைத்திய சாலையின் தலைவர் பதவியை வகிப்பதிலிருந்து இல்லாதொழிவதன்மேல், சபையின் உறுப்பின ரொருவர் என்றவாறான பதவியை வறிதாக்கியுள் ளாரெனக் கருதப்படுதல் வேண்டும்.".

**19**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 27 ஆம் பிரிவானது, "ஆறாக இருத்தல் வேண்டும்." என்னும் சொற்களுக்குப் பதிலாக, "பதினான் காக இருத்தல் வேண்டும்." என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது. முதன்மைச் சட்டவாக்கத்தின் 27 ஆம் பிரிவைத் திருத்துதல்

முதன்மைச் சட்டவாக்கத்தின் 30 ஆம் பிரிவைத் திருத்துதல்

**20.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 30 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அதன் (அ) என்னும் பந்திக்குப் பதிலாக பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும்:-

"(அ)(i) இச்சட்டத்தின்கீழ் பட்டப்பின்படிப்புப் பட்டங்கள், அடிப்படைப் பட்டங்கள், திப்புளோமாக்கள் மற்றும் சான்றிதழ்கள் என்பவற்றை அளிப்பதற்குத் தேவையான தகைமைகளைத் தீர்மானித்தல்;

(ii) இச்சட்டத்தின்கீழ் பதிவுக்காகக் கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய உள்நாட்டு அல்லது வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களினால் அல்லது பட்டமளிப்பு நிறுவனங்களினால் நடாத்தப்பட்ட அடிப்படைப் பட்டங்களை, திப்புளோமாக்களை மற்றும் சான்றிதழ்களை வழங்குகின்ற பாடநெறிகளின் நியமங்களைத் தீர்மானித்தல்;

(iii) இச்சட்டத்தின்கீழ் பதிவுக்காகக் கவனத்திற் கொள்ளப்படவேண்டிய உள்நாட்டு அல்லது வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களினால் அல்லது பட்டமளிப்பு நிறுவனங்களினால் வழங்கப்பட்ட அடிப்படைப் பட்டங்களை, திப்புளோமாக்களை மற்றும் சான்றிதழ்களைக் கொண்டிருப்போருக்கான பரீட்சைகளைத் தீர்மானித்தலும் நடாத்துதலும்;

(iv) இச்சட்டத்தின்கீழ் பதிவுக்காகக் கவனத்திற் கொள்ளப்படவேண்டிய உள்நாட்டு அல்லது வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களினால் அல்லது பட்டமளிப்பு நிறுவனங்களினால்

வழங்கப்பட்ட அடிப்படைப் பட்டங்களை, திப்புளோமாக்களை மற்றும் சான்றிதழ் களைக் கொண்டிருப்போரினால் தேவைப் படுத்தப்பட்ட உள்ளகப்பயிற்சிக்கான அல்லது பயிற்சிக்கான நியமங்களையும் காலப்பகுதி யையும் தீர்மானித்தல்.

(2) அதன் (ஆ) என்னும் பந்தியில், "சபையின் திப்புளோமாக் களை அல்லது சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்வதற்கு" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "சபையின் பட்டப் பின்படிப்பு பட்டங்களை அல்லது அடிப்படைப் பட்டங்களை அல்லது திப்புளோமாக்களை அல்லது சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்வதற்கு" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

(3) அதன் (இ) என்னும் பந்தியில், சபையின் திப்புளோமாக் களை அல்லது சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்வதற்கு" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "சபையின் பட்டப்பின்படிப்பு பட்டங்களை அல்லது அடிப்படைப் பட்டங்களை அல்லது திப்புளோமாக்களை அல்லது சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்வதற்கு" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

(4) பந்தி (இ) இனை உடனடுத்து, பின்வரும் புதிய பந்தியை உட்சேர்ப்பதன்மூலமும்:-

"(இஅ) இச்சட்டத்தின்கீழான பட்டப்பின்படிப்பு பட்டங் கள், அடிப்படைப் பட்டங்கள், திப்புளோமாக்கள் மற்றும் சான்றிதழ்கள் என்பவற்றை வழங்கு வதற்காக, அவசியமானவிடத்து, எவையேனும் கட்டணங்கள் விதித்துரைக்கப்படுதல் தொடர்பில் அமைச்சருக்கு விதப்புரைகளைச் செய்தல்;".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 33 ஆம் பிரிவைத் திருத்துதல்

**21.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 33 ஆம் பிரிவானது, அதன் (1) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவதனை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:-

"(1) (இதனகத்துப்பின்னர் இப்பாகத்தில் "குழு" எனக் குறிப்பீடு செய்யப்படும்) ஆயுள்வேத ஆராய்ச்சிக் குழு எனவழைக்கப்பட வேண்டிய குழுவொன்று இருத்தல் வேண்டும்; அது பின்வரும் பன்னிரெண்டு உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும், அதாவது-

(அ) ஆணையாளர் தலைமையதிபதி;

(ஆ) ஆயுள்வேத தேசிய வைத்தியசாலையின் தலைவர்;

(இ) பண்டாரநாயக்க ஞாபகார்த்த ஆயுள்வேத ஆராய்ச்சி நிறுவகத்தின் தலைவர்;

(ஈ) கொழும்பு பல்கலைக்கழகம், கம்பஹா விக்கிரமாராச்சி சுதேச மருத்துவ பல்கலைக் கழகம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் மற்றும் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் சித்த மருத்துவ அலகு என ஒவ்வொன்றையும் பிரதிநிதித்துவப் படுத்துகின்ற நான்கு பேராசிரியர்கள்;

(உ) 1994 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, விஞ்ஞான, தொழில்நுட்பவியல் அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட தேசிய விஞ்ஞான மன்றத்தினால் முறையாக நியமிக்கப்பட்ட ஓர் உறுப்பினர்;

(ஊ) 2003 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, புலமைச் சொத்துச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை தேசிய புலமைச்சொத்து அலுவலகத்தினால் முறையாக நியமிக்கப்பட்ட ஓர் உறுப்பினர்;

(எ) விஞ்ஞானம் எனும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சுச் செயலாளரினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட ஓர் உறுப்பினர்;

(ஏ) சட்டத்துறையில் பத்து அல்லது அதற்கு மேற்பட்ட ஆண்டுகால அனுபவத்தைக் கொண்டுள்ள ஆட்களிடையேயிருந்து அமைச்சரினால் நியமிக்கப்பட்ட ஓர் உறுப்பினர்; அத்துடன்

(ஐ) எவ்வமைச்சருக்கு நிதி என்னும் விடயம் குறித்தளிக்கப்படுகின்றதோ அவ்வமைச்சரின் அமைச்சுச் செயலாளரினால் நியமிக்கப்பட்ட சிரேட்ட உதவிச் செயலாளர் பதவிவரிசைக்குக் குறையாத ஓர் உறுப்பினர்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 38 ஆம் பிரிவைத் திருத்துதல்*

**22.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 38 ஆம் பிரிவானது, "மூன்றாக இருத்தல் வேண்டும்." என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஐந்தாக இருத்தல் வேண்டும்." என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 41 ஆம் பிரிவைத் திருத்துதல்*

**23.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 41 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அதன் (1) ஆம் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியில், "ஆயுள்வேத மருத்துவ சிகிச்சை" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஆயுள்வேத மருத்துவ சிகிச்சை மற்றும் ஆயுள்வேத ஆரம்ப சுகாதாரக் கவனிப்பு" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்:-

(2) அதன் (2) ஆம் உட்பிரிவில், (ஈ) என்னும் பந்தியை உடனடுத்து பின்வரும் புதிய பந்தியை உட்புகுத்துவதன் மூலமும்;

“(ஈஅ) பந்திகள் (அ) முதல் (ஈ) வரையான பந்திகளில் குறிப்பீடு செய்யப்பட்ட எவையேனும் கருமங்கள் தொடர்பில் எவையேனும் விதித்துரைக்கப்பட்ட கட்டணங்களை அறவீடு செய்தல்;”;

(3) அதன் (2) ஆம் உட்பிரிவை உடனடுத்து பின்வரும் புதிய உட்பிரிவைச் சேர்ப்பதன் மூலமும்:-

“(3) ஓராம் மற்றும் (2) ஆம் உட்பிரிவுகளில் குறித்துரைக்கப்பட்ட கடமைகளையும் பொறுப்புக்களையும் நிறைவேற்றுவதற்கு ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட உபகுழுக்களை வகுத்தமைத்தல்.”.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 51 ஆம் பிரிவைத் திருத்துதல்

**24.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 51 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அதன் (1) ஆம் உட்பிரிவில் -

(அ) பந்தி (அ) இல், “மற்றும் ஆயுள்வேத மருத்துவத் தொழிலர்களைப் பதிவுசெய்வதற்கான ஒரு விசேட இடாப்பு” என்னும் சொற்களுக்குப் பதிலாக, “மற்றும் ஒரு விசேட இடாப்பும் ஆலோசக வைத்தியர் இடாப்பும்;” என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(ஆ) பந்தி (இ) இனை உடனடுத்து பின்வரும் புதிய பந்தியைச் சேர்ப்பதன்மூலமும்:-

“(ஈ) ஆயுள்வேத ஆண் உடற் பிடிப்பாளர்களை அல்லது பெண் உடற்பிடிப்பாளர்களைப் பதிவுசெய்வதற்கான ஓர் இடாப்பு.”.

(2) அதன் (2) ஆம் உட்பிரிவை உடனடுத்து பின்வரும் புதிய உட்பிரிவைச் சேர்ப்பதன்மூலமும்:-

"(3) ஆலோசக வைத்தியர்களைப் பதிவுசெய்யும் நோக்கத்துக்காக இச்சட்டத்தின் கீழ் பேரவையினால் பேணப்படும் ஆலோசனை வைத்தியர்களுக்கான இடாப்பொன்று இருத்தல் வேண்டும்.".

**25.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 52 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:- *முதன்மைச் சட்டவாக்கத்தின் 52 ஆம் பிரிவைத் திருத்துதல்*

(1) அதன் (1) ஆம் உட்பிரிவில், "பொது இடாப்பில் அல்லது விசேட இடாப்பில்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "பொது இடாப்பில், விசேட இடாப்பில் அல்லது ஆலோசக வைத்தியர் இடாப்பில்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்:-

(2) அதன் (3) ஆம் உட்பிரிவை உடனடுத்து பின்வரும் புதிய உட்பிரிவை உட்புகுத்துவதன்மூலமும்:-

"(3அ) ஆலோசக வைத்தியர் இடாப்பில் ஆலோசக வைத்தியரொருவராகப் பதிவுசெய்வதற்கான விண்ணப்பமொன்று பின்வரும் சந்தர்ப்பங்களிற்தவிர பேரவையினால் மறுக்கப்படுதலாகாது-

(அ) விண்ணப்பகாரர், 55 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் அத்தகைய பதிவுக்கு உரித்துடையவரல்லர் என்னும் ஏதுவின்மேல், அல்லது

(ஆ) 57 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட வேறேதேனும் ஏதுவின்மேல்; அத்துடன்

(3) அதன் (4) ஆம் உட்பிரிவில், “பொது இடாப்பு மற்றும் விசேட இடாப்பு ஆகிய இரண்டிலும்” என்னும் சொற்களுக்குப் பதிலாக, “பொது இடாப்பிலும், விசேட இடாப்பிலும் மற்றும் ஆலோசக வைத்தியர் இடாப்பிலும்” என்னும் சொற்களை இடுவதன்மூலமும்.

**26**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 53 ஆம் பிரிவானது, அப்பிரிவில், “ஆயுள்வேத வாகடகர் அல்லது ஆயுள்வேத தாதி’ என்னும் சொற்கள் தோன்றுமிடங்களிலெல்லாம் அவற்றுக்குப் பதிலாக, “ஆயுள்வேத வாகடகர் அல்லது ஆயுள்வேத தாதி அல்லது ஆயுள்வேத ஆண் உடற்பிடிப்பாளர் அல்லது பெண் உடற்பிடிப் பாளர்” என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 53 ஆம் பிரிவைத் திருத்துதல்*

**27**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 54 ஆம் பிரிவானது, அப்பிரிவில், “ஆயுள்வேத வாகடகர் அல்லது ஆயுள்வேத தாதி” என்னும் சொற்கள் தோன்றுமிடங்களிலெல்லாம் அவற்றுக்குப் பதிலாக, “ஆயுள்வேத வாகடகர், ஆயுள்வேத தாதி அல்லது ஆயுள்வேத ஆண் உடற்பிடிப்பாளர் அல்லது பெண் உடற் பிடிப்பாளர்” என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 54 ஆம் பிரிவைத் திருத்துதல்*

**28**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 55 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியில், “இலங்கை பல்கலைக்கழகத்தின் ஆயுள்வேத நிறுவகத்தினால் வழங்கப்பட்ட” என்னும் சொற்களுக்குப் பதிலாக, “இலங்கை கொழும்பு பல்கலைக்கழகத்தின் சுதேச மருத்துவ பீடத்தினால், இலங்கை கம்பஹா விக்கிரமாராச்சி சுதேச மருத்துவப் பல்கலைக்கழகத்தின் சுதேச மருத்துவ பீடத்தினால், இலங்கை யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் சித்த மருத்துவ அலகினால், இலங்கை கிழக்கு பல்கலைக்கழகத்தின் சித்த மருத்துவ அலகினால் வழங்கப்பட்ட” என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படு கின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 55 ஆம் பிரிவைத் திருத்துதல்*

**29**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 56 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப்பதிலாக பின்வரும் பிரிவு இடப்படுகின்றது:-

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 56 ஆம் பிரிவைத் திருத்துதல்*

"ஓர் ஆயுள்வேத வாகடகராக, ஆயுள்வேத தாதியாக அல்லது ஆயுள்வேத ஆண் உடற்பிடிப் பாளராக அல்லது பெண் உடற்பிடிப் பாளராக பதிவுசெய்வ தற்கான தகைமைகள்

56. ஆளெவரும் -

(அ) இலங்கைப் பிரசையொருவராக இருந்தாலொழிய; அத்துடன்

(ஆ) வினைத்திறனான முறையில், விடயத்துக் கேற்ப, ஆயுள்வேத மருந்துற்பத்தி விஞ்ஞானத்தில் போதிய அறிவை, அனுபவத்தை மற்றும் திறனைக் கொண்டுள்ளாரென்று அல்லது ஆயுள்வேத தாதியியலில் போதிய அனுபவத்தைக் கொண்டுள்ளாரென்று அல்லது ஓர் ஆயுள்வேத ஆண் உடற்பிடிப்பாளராக அல்லது பெண் உடற்பிடிப்பாளராக உயர்தொழில்சார் திறனைக் கொண்டுள்ளாரென்று பேரவையைத் திருப்திப்படுத்தினாலொழிய,

அத்தகைய ஆள் ஓர் ஆயுள்வேத வாகடகராக, ஆயுள்வேத தாதியாக அல்லது ஆயுள்வேத ஆண் உடற்பிடிப்பாளராக அல்லது பெண் உடற்பிடிப் பாளராக பதிவுசெய்யப்படுவதற்கு உரித்துடையவராதலாகாது.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 57 ஆம் பிரிவைத் திருத்துதல்

**30.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 57 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அதன் (1) ஆம் உட்பிரிவில் -

(அ) பந்தி (அ) இல், "வாகடகராக, ஆயுள்வேத தாதியாக" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "வாகடகராக, ஆயுள்வேத தாதியாக அல்லது ஆயுள்வேத ஆண் உடற்பிடிப்பாளராக அல்லது பெண் உடற்பிடிப்பாளராக" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(ஆ) பந்தி (ஆ) இல், "வாகடகராக அல்லது ஆயுள் வேத தாதியாக" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "வாகடகராக, ஆயுள்வேத தாதியாக, ஆயுள்வேத ஆண் உடற்பிடிப்பாளராக அல்லது பெண் உடற்பிடிப்பாளராக" என்னும் சொற் களை இடுவதன் மூலமும்;

(இ) பந்தி (இ) இல், "ஏதேனும் திப்புளோமாவை அல்லது சான்றிதழை" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஏதேனும் பட்டப்பின் படிப்புப் பட்டத்தை அல்லது அடிப்படைப் பட்டத்தை அல்லது திப்புளோமாவை அல்லது சான்றிதழை" என்னும் சொற்களை இடுவ தன்மூலமும்;

(2) அதன் (2) ஆம் உட்பிரிவில், அப்பிரிவில், "ஆயுள்வேத வாகடகர் அல்லது ஆயுள்வேத தாதி" என்னும் சொற்கள் தோன்றுமிடங்களிலெல்லாம் அவற்றுக்குப்பதிலாக, "ஆயுள்வேத வாகடகர் அல்லது ஆயுள்வேத தாதி அல்லது ஆயுள்வேத ஆண் உடற்பிடிப்பாளர் அல்லது பெண் உடற்பிடிப்பாளர்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(3) அதன் (3) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப்பதிலாக பின்வருவதனை இடுவதன்மூலமும்:-

"(3) ஆளொருவர், பொது இடாப்பு மற்றும் ஆலோசக வைத்தியர் இடாப்பு ஆகிய இரண்டிலும் ஓர் ஆயுள்வேத மருத்துவத்தொழிலராக பதிவுசெய்யப்படுகின்றவிடத்து, பேரவையானது, பொது இடாப்பிலுள்ள அவரது பதிவு இல்லாதாக்கப்படின், ஆலோசக வைத்தியர் இடாப்பி லுள்ள அவரது பதிவை கட்டளைமூலம் இல்லாதாக்குதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 58 ஆம் பிரிவைத் திருத்துதல்

**31.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 58 ஆம் பிரிவானது, அப்பிரிவில் "ஆயுள்வேத வாகடகர் அல்லது ஆயுள்வேத தாதி" என்னும் சொற்கள் தோன்றுமிடங்களிலெல்லாம் அவற்றுக்குப் பதிலாக, "ஆயுள்வேத வாகடகர் அல்லது ஆயுள்வேத தாதி அல்லது ஆயுள்வேத ஆண் உடற்பிடிப்பாளர் அல்லது பெண் உடற்பிடிப்பாளர்" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 59 ஆம் பிரிவைத் திருத்துதல்

**32.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 59 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அதன் (1) ஆம் உட்பிரிவில், "ஆயுள்வேத வாகடகர் அல்லது ஆயுள்வேத தாதி" என்னும் சொற்களுக்கும் மற்றும் "ஆயுள்வேத தாதியர் இடாப்பு" என்னும் சொற்களுக்கும் பதிலாக, முறையே "ஆயுள்வேத வாகடகர், ஆயுள்வேத தாதியர் அல்லது ஆயுள்வேத ஆண் உடற்பிடிப்பாளர் அல்லது பெண் உடற்பிடிப்பாளர்" மற்றும் "ஆயுள்வேத தாதியர் இடாப்பு, ஆயுள்வேத ஆண் உடற்பிடிப்பாளர் அல்லது பெண் உடற்பிடிப்பாளர் இடாப்பு" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

(2) அதன் (2) ஆம் உட்பிரிவில், "ஆயுள்வேத வாகடகர் அல்லது ஆயுள்வேத தாதி" என்னும் சொற்களுக்கும் மற்றும் "ஆயுள்வேத தாதியர் இடாப்பு" என்னும் சொற்களுக்கும் பதிலாக, முறையே "ஆயுள்வேத வாகடகர் அல்லது ஆயுள்வேத தாதியர் அல்லது ஆயுள்வேத ஆண் உடற்பிடிப்பாளர் அல்லது பெண் உடற்பிடிப்பாளர்" மற்றும் "ஆயுள்வேத தாதியர் இடாப்பு, ஆயுள்வேத ஆண் உடற்பிடிப்பாளர் அல்லது பெண் உடற்பிடிப்பாளர் இடாப்பு" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

(3) அதன் (3) ஆம் உட்பிரிவில், "ஆயுள்வேத வாகடகர் அல்லது ஆயுள்வேத தாதி" என்னும் சொற்களுக்கும் மற்றும் "ஆயுள்வேத தாதியர் இடாப்பு" என்னும்

சொற்களுக்கும் பதிலாக, முறையே "ஆயுள்வேத வாகடகர் அல்லது ஆயுள்வேத தாதியர் அல்லது ஆயுள்வேத ஆண் உடற்பிடிப்பாளர் அல்லது பெண் உடற்பிடிப்பாளர்" மற்றும் "ஆயுள்வேத தாதியர் இடாப்பு, ஆயுள்வேத ஆண் உடற்பிடிப்பாளர் அல்லது பெண் உடற்பிடிப்பாளர் இடாப்பு" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 60 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்*

**33.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 60 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப்பதிலாக பின்வரும் பிரிவு இடப்படுகின்றது:-

*"30 ஆம் பிரிவின்கீழ் தத்துவங்களைப் பிரயோகிப்பதிலும் மற்றும் 41 ஆம் பிரிவின்கீழ் கடமைகளை நிறைவேற்றுவதிலும் 18 ஆம் பிரிவின் நோக்கங்களுக்காக விதிக்கப்பட வேண்டிய கட்டணங்கள்*

60. (1) ஓர் ஆயுள்வேத மருத்துவத்தொழிலராக, ஆயுள்வேத வாகடகராக அல்லது ஆயுள்வேத தாதியாக அல்லது ஆயுள்வேத ஆண் உடற்பிடிப்பாளராக அல்லது பெண் உடற்பிடிப்பாளராக பதிவுசெய்வதற்கான கட்டணமானது, இச்சட்டத்தின்கீழ் பேரவையினால் ஆக்கப்பட்ட விதிகள்மூலம் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய தொகையாக இருத்தல் வேண்டும்.

(2) எவரேனுமாளினால் விடயத்துக்கேற்ப, ஓர் ஆயுள்வேத மருத்துவத்தொழிலராக, ஆயுள்வேத வாகடகராக அல்லது ஆயுள்வேத தாதியாக அல்லது ஆயுள்வேத ஆண் உடற்பிடிப்பாளராக அல்லது பெண் உடற்பிடிப்பாளராக பதிவுசெய்யப்படுவதற்கான கட்டணம் செலுத்தப்படும்வரை, பதிவாளர், அவ்வாளின் பெயரை ஆயுள்வேத மருத்துவத்தொழிலர் இடாப்பில், ஆயுள்வேத வாகடகர் இடாப்பில், அல்லது ஆயுள்வேத தாதியர் இடாப்பில், ஆயுள்வேத ஆண் உடற்பிடிப்பாளர் அல்லது பெண் உடற்பிடிப்பாளர் இடாப்பில் பதிவுசெய்தலாகாது.

(3) இச்சட்டத்தின் 30 ஆம் பிரிவின்கீழ் ஆயுள்வேத கல்வி மற்றும் வைத்தியசாலைச் சபையானது அதனது தத்துவங்களை, பணிகளை மற்றும் கடமைகளை பிரயோகிப்பதில், நிறைவேற்றுவதில் மற்றும் புரிவதில் அச்சபையினால் விதிக்கப்படற் பாலவையான கட்டணங்கள் ஒழுங்குவிதிகள்மூலம் விதித்துரைக்கப்பட்டவாறாக இருத்தல் வேண்டும்.

(4) இச்சட்டத்தின் 41 ஆம் பிரிவின்கீழ் ஆயுள்வேத ஆராய்ச்சிக் குழுவானது அதனது கடமைகளைப் புரிவதற்காக அக்குழுவினால் விதிக்கப்படற் பாலவையான கட்டணங்கள் ஒழுங்குவிதிகள்மூலம் விதித்துரைக்கப்பட்டவாறாக இருத்தல் வேண்டும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 61 ஆம் பிரிவைத் திருத்துதல்

**34**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 61 ஆம் பிரிவானது, "ஆயுள்வேத வாகடகர் அல்லது ஆயுள்வேத தாதி" என்னும் சொற்களுக்குப் பதிலாக "ஆயுள்வேத வாகடகர் அல்லது ஆயுள்வேத தாதி அல்லது ஆயுள்வேத ஆண் உடற்பிடிப்பாளர் அல்லது பெண் உடற்பிடிப்பாளர்" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 62 ஆம் பிரிவைத் திருத்துதல்

**35**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 62 ஆம் பிரிவானது, "ஆயுள்வேத தாதியர் இடாப்பு" என்னும் சொற்களுக்கும் மற்றும் ஆயுள்வேத வாகடகர் அல்லது ஆயுள்வேத தாதி" என்னும் சொற்களுக்கும் பதிலாக, முறையே, "ஆயுள்வேத தாதியர் இடாப்பு, ஆயுள்வேத ஆண் உடற்பிடிப்பாளர் அல்லது பெண் உடற்பிடிப் பாளர் இடாப்பு" என்னும் சொற்களையும் மற்றும் "ஆயுள்வேத வாகடகர் அல்லது ஆயுள்வேத தாதி அல்லது ஆயுள்வேத ஆண் உடற்பிடிப்பாளர் அல்லது பெண் உடற்பிடிப்பாளர்" என்னும் சொற்களையும் இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 63 ஆம் பிரிவைத் திருத்துதல்

**36**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 63 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அதன் (1) ஆம் உட்பிரிவில், "ஆயுள்வேத வாகடகர் அல்லது ஆயுள்வேத தாதி" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஆயுள்வேத வாகடகர் அல்லது ஆயுள்வேத தாதி அல்லது ஆயுள்வேத ஆண் உடற்பிடிப்பாளர் அல்லது பெண் உடற்பிடிப்பாளர்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(2) அதன் (3) ஆம் உட்பிரிவில், "ஆயுள்வேத வாகடகர் அல்லது ஆயுள்வேத தாதி" என்னும் சொற்களுக்கும் மற்றும் ஆயுள்வேத தாதியர் இடாப்பு" என்னும் சொற்களுக்கும் பதிலாக, முறையே "ஆயுள்வேத வாகடகர், ஆயுள்வேத தாதியர் அல்லது ஆயுள்வேத ஆண் உடற்பிடிப்பாளர் அல்லது பெண் உடற்பிடிப்பாளர்" மற்றும் "ஆயுள்வேத தாதியர் இடாப்பு, ஆயுள்வேத ஆண் உடற்பிடிப்பாளர் அல்லது பெண் உடற்பிடிப்பாளர் இடாப்பு" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 66 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்*

**37**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 66 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப்பதிலாக பின்வரும் பிரிவு இடப்படுகின்றது:-

*"ஆயுள்வேத வாகடகர், ஆயுள்வேத தாதி அல்லது ஆயுள்வேத ஆண் உடற் பிடிப்பாளர் அல்லது பெண் உடற் பிடிப்பாளர் முறையாக தகைமை பெற்றவராகக் கருதப்படுதல்*

66. ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் நோக்கங்களுக்காக, ஒரு பதிவுபெற்ற ஆயுள்வேத வாகடகர், ஆயுள்வேத தாதி அல்லது ஆயுள்வேத ஆண் உடற்பிடிப்பாளர் அல்லது பெண் உடற்பிடிப்பாளர், முறையே, சட்டமுறையாக அல்லது முறையாக தகைமைபெற்ற ஓர் ஆயுள்வேத வாகடகராக அல்லது ஆயுள்வேத தாதியாக அல்லது ஆயுள்வேத ஆண் உடற்பிடிப்பாளராக அல்லது பெண் உடற்பிடிப்பாளராக கருதப்படுதல் வேண்டும்.".

**38.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 69 ஆம் பிரிவானது, அதன் (2) ஆம் உட்பிரிவில் "ஆயுள்வேத மருத்துவத் தொழிலர்களின் விசேட இடாப்பில்" என்னும் சொற்களுக்கும் பதிலாக, "ஆயுள்வேத மருத்துவத் தொழிலர்களின் விசேட இடாப்பில் அல்லது ஆயுள்வேத மருத்துவத் தொழிலர்களின் ஆலோசக வைத்தியர் இடாப்பில்" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 69 ஆம் பிரிவைத் திருத்துதல்*

**39.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 70 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப்பதிலாக பின்வரும் பிரிவு இடப்படுகின்றது:-

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 70 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்*

*"பதிவுபெற்ற ஆயுள்வேத வாகடகர், பதிவுபெற்ற ஆயுள்வேத தாதி அல்லது பதிவுபெற்ற ஆயுள்வேத ஆண் உடற் பிடிப்பாளர் அல்லது பெண் உடற் பிடிப்பாளர் உற்பத்தி செய்வதற்கு அல்லது தொழில் புரிவதற்கு உரித்துடையவராதல்*

70. (1) பதிவுபெற்ற ஒவ்வோர் ஆயுள்வேத வாகடகரும் ஆயுள்வேத மருந்துகளை உற்பத்தி செய்வதற்கு உரித்துடையவராதல் வேண்டும்.

(2) பதிவுபெற்ற ஒவ்வோர் ஆயுள்வேத தாதியும் ஆயுள்வேத தாதியலில் தொழில்புரிவதற்கு உரித்துடையவராதல் வேண்டும்.

(3) பதிவுபெற்ற ஒவ்வோர் ஆயுள்வேத ஆண் உடற்பிடிப்பாளரும் அல்லது பெண் உடற்பிடிப்பாளரும் ஆயுள்வேத உடற்பிடிப்பு நுட்பங்களில் தொழில் புரிவதற்கு உரித்துடையவராதல் வேண்டும்.".

**40.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 71 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 71 ஆம் பிரிவைத் திருத்துதல்*

(1) அதன் (1) ஆம் உட்பிரிவில், "பதிவுபெற்ற ஆயுள்வேத தாதி" என்னும் சொற்கள் தோன்றுமிடங்களிலெல்லாம் அச்சொற்களுக்குப் பதிலாக "பதிவுபெற்ற ஆயுள்வேத தாதி அல்லது பதிவுபெற்ற ஆயுள்வேத ஆண் உடற்பிடிப்பாளர் அல்லது பெண் உடற்பிடிப்பாளர்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

(2) அதன் (2) ஆம் உட்பிரிவுக்குப் பதிலாக பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலமும்:-

"(2) பதிவுபெற்ற ஓர் ஆயுள்வேத வைத்தியசாலையின், மூலிகைப் பயிர்ச்செய்கையின், ஆயுள்வேத வாகடகத்தின், மூலிகையகத்தின், ஆயுள்வேத விற்பனை நிலையத்தின் அல்லது ஆயுள்வேத களஞ்சியத்தின் தனியுரிமையாளராக 10 ஆம் பிரிவின்கீழ் பதிவுசெய்கின்ற ஆளொருவர்-

(அ) அவர் பயிர்ச்செய்கையை தனிப்பட்டமுறையில் மேற்பார்வையும் முகாமையும் செய்வதற்கு, விடயத்துக்கேற்ப, அத்தகைய ஆயுள்வேத வைத்தியசாலையில், மூலிகைப் பயிர்ச்செய்கையில், வாகடகத்தில், மூலிகையகத்தில், ஆயுள்வேத விற்பனை நிலையத்தில் அல்லது ஆயுள்வேத களஞ்சியங்களில், விடயத்துக்கேற்ப, மருந்துகளை, அவுடதங்களை அல்லது நஞ்சுகளை விநியோகிப்பதற்கு, விற்பதற்கு அல்லது உற்பத்திசெய்வதற்கு பதிவுபெற்ற ஓர் ஆயுள்வேத வாகடகராகத் தொழிலுக்கு அமர்த்தப்படுகின்றாரெனில்; அத்துடன்

(ஆ) அவ்வாறு தொழிலுக்கமர்த்தப்பட்ட வாகடகரின் பெயர் பேரவைக்கு எழுத்தில் அறிவிக்கப் பட்டுள்ளதெனில்,

பதிவு செய்யப்படாத ஆயுள்வேத வாகடராக எது எவ்வாறிருப்பினும், அத்தகைய ஆயுள்வேத வைத்தியசாலையின், மூலிகைப் பயிர்ச் செய்கையின், வாகடகத்தின், மூலிகையகத்தின், ஆயுள்வேத விற்பனை நிலையத்தின் அல்லது களஞ்சியங்களின் தொழில் நோக்கங்களுக்காக அவர் பதிவுபெற்ற ஓர் ஆயுள்வேத வாகடகரினால் பயன்படுத்தப்படக்கூடிய ஏதேனும் பெயரை, தலைப்பை, சேர்க்கையை அல்லது விவரணத்தைப் பயன்படுத்தலாம்.

**41.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 72 ஆம் பிரிவானது, "ஆயுள்வேத வாகடகர் அல்லது ஆயுள்வேத தாதி" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஆயுள்வேத வாகடகர் அல்லது ஆயுள்வேத தாதி அல்லது ஆயுள்வேத ஆண் உடற்பிடிப்பாளர் அல்லது பெண் உடற்பிடிப்பாளர்" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 72 ஆம் பிரிவைத் திருத்துதல்*

**42.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 77 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 77 ஆம் பிரிவைத் திருத்துதல்*

(1) அதன் (1) ஆம் பிரிவை நீக்கிவிட்டு அதற்குப்பதிலாக பின்வருவதனை இடுவதன்மூலமும்:-

"(1) ஆயுள்வேத மருத்துவத்தினதும் அறுவை மருத்துவத்தினதும் நோக்கத்துக்காக, ஏதேனும் பொருளின், பதார்த்தத்தின் அல்லது ஔடதத்தின் உற்பத்தியை, தயாரிப்பை, இறக்குமதியை, ஏற்றுமதியை, கொள்வனவை, களஞ்சியப்படுத்தலை, விளம்பரப்படுத்தலை, இடம்பெயர்த்தலை, தரக்கட்டுப்பாட்டை, விற்பனையை, வழங்குகையை, விநியோகத்தை அல்லது பகிர்ந்தளித்தலைத் தடுப்பதற்கு, ஒழுங்குபடுத்துவதற்கு அல்லது கட்டுப்படுத்துவதற்கு அவசியமெனக் கருதக்கூடிய ஒழுங்குவிதிகளை ஆக்குவதற்கு அதிகாரி வலுவளிக்கப்பட்டவாறான அத்தகைய எல்லாக் கருமங்கள் தொடர்பிலும் அத்தகைய எல்லா ஏற்பாடுகளையும் உள்ளடக்குகின்ற ஆயுள்வேத கோவையொன்றை விதித்துரைத்து இச்சட்டத்தின்கீழான ஒழுங்குவிதிகள் ஆக்கப்படலாம். அத்தகைய கோவையானது, இதனகத்து முன்னர் அளிக்கப்பட்ட தத்துவங்களின் பொதுத்தன்மைக்குப் பங்கமின்றி, பின்வரும் எல்லாக் கருமங்கள் தொடர்பிலும் அல்லது எவையேனும் கருமங்கள் தொடர்பில் ஏற்பாடு செய்யலாம்-

(அ) அந்நோக்கத்துக்காக ஏதேனும் பொருளை, பதார்த்தத்தை அல்லது ஔடதத்தை, விடயத்துக்கேற்ப, ஒரு நஞ்சாக, நஞ்சுள்ள பதார்த்தமாக அல்லது அபாயகர ஔடதமாக வெளிப்படுத்துதல்;

(ஆ) ஏதேனும் ஆயுள்வேத தயாரிப்பின் உற்பத்தியை, தயாரிப்பை, இறக்குமதியை, ஏற்றுமதியை, கொள்வனவை, களஞ்சியப் படுத்தலை, விளம்பரப்படுத்தலை, இடம் பெயர்த்தலை, தரக்கட்டுப்பாட்டை, விற்ப னையை, வழங்குகையை அல்லது விநியோ கத்தை தடுத்தல், ஒழுங்கேற்படுத்துதல் அல் லது கட்டுப்படுத்துதல்;

(இ) ஆராய்ச்சி மற்றும் விரிவாக்கலுக்காக ஏதேனும் மூலிகைத் தோட்டத்தை பதிவுசெய்தலும் பேணுதலும்;

(ஈ) ஏதேனும் மூலிகைப் பயிர்ச்செய்கைக்காகவும் மற்றும் பயிரை இடம்பெயர்த்தல் மற்றும் களஞ்சியப்படுத்தல் உள்ளடங்கலான தொடர்புபட்ட ஏதேனும் செயற்பாட்டுக்காகவும் உரிமங்களை அல்லது அனுமதிப்பத்திரங் களைப் பதிவுசெய்தல் அல்லது வழங்குதல்;

(உ) பதிவுசெய்தலுக்காக, உரிமமளித்தலுக்காக அல்லது அனுமதிப்பத்திரங்களை வழங்கு வதற்காக விண்ணப்பம் செய்தல், அத்தகைய பதிவை, உரிமத்தை அல்லது அனுமதிப் பத்திரத்தை அளித்தல், மறுத்தல், இடை நிறுத்துதல், மற்றும் இல்லாதாக்குதல் ஆகியனவுட்பட, ஆனால் அவற்றுக்கு மட்டுப் படுத்தப்படாது, அத்தகைய ஒழுங்குவிதியை அல்லது கட்டுப்பாட்டை பயனுறுத்தும்

நோக்கத்துக்காக அத்தகைய பதிவுசெய்தல், உரிமமளித்தல் அல்லது அனுமதிப்பத்திரங் களை வழங்குதல் பற்றிய முறைமையொன்றை அறிமுகப்படுத்தலும் தொழிற்படுத்தலும்;

(ஊ) அத்தகைய மூலிகைப் பயிர்ச்செய்கையிலும் மற்றும் அத்தகைய உற்பத்தி, தயாரிப்பு, இறக்குமதி, ஏற்றுமதி, கொள்வனவு, களஞ்சியப் படுத்துகை, விளம்பரம், இடம்பெயர்த்தல், தரக்கட்டுப்பாடு, விற்பனை, வழங்குகை, விநியோகம் அல்லது பகிர்ந்தளித்தல் என்பவற்றிலும் எடுக்கப்படவேண்டிய முன்னெச்சரிக்கைகளும் மற்றும் இணங்கி யொழுகப்பட வேண்டிய நிபந்தனைகளும்;

(எ) அத்தகைய மூலிகைப் பயிர்ச்செய்கையிலும் மற்றும் அத்தகைய உற்பத்தி, தயாரிப்பு, இறக்குமதி, ஏற்றுமதி, கொள்வனவு, களஞ்சியப் படுத்துகை, விளம்பரம், இடம்பெயர்த்தல், தரக்கட்டுப்பாடு, விற்பனை, வழங்குகை, விநியோகம் அல்லது பகிர்ந்தளித்தல் என்பவற்றிலும் ஈடுபட்டுள்ள ஆட்களினால் வைத்திருக்கவும் பேணப்படவும் வேண்டிய புத்தகங்களும் பதிவேடுகளும் மற்றும் கொடுத்துதவப்படவேண்டிய விபரத்திரட்டுக் களும்;

(ஏ) எந்த வளவுகளில் அத்தகைய மூலிகைப் பயிர்ச்செய்கையும் மற்றும் அத்தகைய உற்பத்தி, தயாரிப்பு, இறக்குமதி, ஏற்றுமதி, கொள்வனவு, களஞ்சியப்படுத்துகை, விளம்பரம், இடம் பெயர்த்தல், தரக்கட்டுப்பாடு, விற்பனை, வழங்குகை, விநியோகம் அல்லது பகிர்ந் தளித்தல் என்பனவும் கொண்டுநடாத்தப்படு கின்றனவோ அந்த வளவுகளையும் மற்றும்

அந்த நோக்கத்துக்காக வைத்திருக்கப்படுகின்றவையும் பேணப்படுகின்றவையுமான பதிவேடுகளையும் புத்தகங்களையும் பரிசோதித்தல்;

(ஐ) இப்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் கருமம் தொடர்பில் அவசியமானவிடத்து கட்டணங்களை விதித்தல்; அத்துடன்

(ஒ) மேற்சொல்லப்பட்ட கருமங்களுக்கு இடைநேர் விளைவான அல்லது அக்கருமங்களுடன் சம்பந்தப்பட்ட வேறு எல்லாக் கருமங்களும்.".

(2) அதன் (2) ஆம் உட்பிரிவில், "பிரதம அமைச்சர்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "சனாதிபதி" என்னும் சொல்லை இடுவதன்மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 79 ஆம் பிரிவைத் திருத்துதல்

**43.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 79 ஆம் பிரிவானது, அப்பிரிவில் "பதிவுபெற்ற ஆயுள்வேத வைத்தியசாலை, ஏதேனும் பதிவுபெற்ற ஆயுள்வேத வாகடகம்," என்னும் சொற்கள் தோன்றுமிடங்களிலெல்லாம் அவற்றுக்குப்பதிலாக, "பதிவுபெற்ற ஆயுள்வேத வைத்தியசாலை, ஏதேனும் பதிவுபெற்ற ஆயுள்வேத வாகடகம், ஏதேனும் ஆயுள்வேத ஔடத உற்பத்தியகம், ஏதேனும் மூலிகைப் பயிர்ச்செய்கை," என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 80 ஆம் பிரிவைத் திருத்துதல்

**44.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 80 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய பிரிவு இடப்படுகின்றது:-

"தவறுகளும் தண்டனைகளும்

80. (1) (அ) இச்சட்டத்தினால் அல்லது இச்சட்டத்தின்கீழ் ஆளொருவருக்கு அளிக்கப்பட்ட எவையேனும் தத்துவங்கள் அவ்வாளினால் பிரயோகிக்கப்படு

கையில் இச்சட்டத்தின்கீழ் அதுசார்பில் அதிகாரமளிக்கப்பட்ட அவரைத் தடுக்கின்ற அல்லது தடைசெய்கின்ற;

(ஆ) இச்சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட அறிவித்தலொன்றின் தேவைப்பாடுகளுக்கு நியாயமான காரணமின்றி இணங்கியொழுகத் தவறுகின்ற;

(இ) இச்சட்டத்தின் கீழ் அவரினால் கொடுத்துதவப்பட்ட ஏதேனும் விபரத்திரட்டில் அல்லது தகவலில் அறிந்துகொண்டே ஏதேனும் பொய்யான கூற்றைக் கூறுகின்ற; அல்லது

(ஈ) எத்தகவலைக் கொடுத்துதவுமாறு அத்தகவல் தொடர்பில் இச்சட்டத்தின்கீழ் அவரினால் கொடுத்துதவப்பட்ட ஏதேனும் விபரத்திரட்டிலிருந்து அல்லது தகவலிலிருந்து ஏதேனும் முக்கிய நிகழ்வை வேண்டுமென்றே விட்டுவிடுகின்ற,

எவரேனுமாள், இச்சட்டத்தின்கீழான தவறொன்றைப் புரிகின்றார் என்பதுடன் நீதிவானொருவரின் முன்னரான சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல், ஒரு இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது இரண்டாண்டுகளை விஞ்சாத இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம் மற்றும் மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

(2) பொதுச் சுகாதாரத்தை சேதப்படுவதில் ஈடுபடுகின்ற செயலொன்றைப்

புரிகின்ற எவரேனுமாள் இச்சட்டத்தின்கீழான தவறொன்றைப் புரிகின்றார் என்பதுடன் நீதிவானொருவரின் முன்னரான சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல், இரண்டு இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது இரண்டாண்டுகளை விஞ்சாத இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம் மற்றும் மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

(3) இச்சட்டத்தின் 79 ஆம் பிரிவின்கீழான தவறொன்றைப் புரிகின்ற எவரேனுமாள், இச்சட்டத்தின்கீழான தவறொன்றைப் புரிகின்றார் என்பதுடன் நீதிவானொருவரின் முன்னரான சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல், இரண்டு இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது இரண்டாண்டுகளை விஞ்சாத இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம் மற்றும் மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

(4) (அ) இச்சட்டத்தின்கீழ் எந்த செயற்பாட்டுக்கு உரிமமொன்று அல்லது அனுமதிப்பத்திரமொன்று தேவைப்படுத்தப்படுகின்றதோ அந்த ஏதேனும் செயற்பாட்டை

உரிமமொன்று அல்லது அனுமதிப்பத்திரமொன்று இல்லாமல் நிறைவேற்றுகின்ற,

(ஆ) ஒரு வளவு, தாபனம், ஒரு பொருள், ஔடதம், பதார்த்தம் அல்லது ஆயுள்வேத தயாரிப்பு இச்சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட செல்லுபடியான உரிமமொன்றைக் கொண்டுள்ளதென்று சுட்டிக்காட்டுகின்ற இலச்சினையை அல்லது குறியீட்டை அல்லது சமிக்ஞையை மோசடியாக வெளிக்காட்டுகின்ற,

எவரேனுமாள், இச்சட்டத்தின் கீழான தவறொன்றைப் புரிகின்றார் என்பதுடன் நீதிவானொருவரின் முன்னரான சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் மேல், ஐந்து இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது இரண்டாண்டுகளை விஞ்சாத இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம் மற்றும் மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

(5) (இப்பிரிவின் (1), (2), (3) மற்றும் (4) ஆம் உட்பிரிவுகளில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏற்பாடுகள் தவிர்ந்த) இச்சட்டத்தின் ஏதேனும் ஏற்பாட்டுக்கு அல்லது அத்தகைய ஏதேனும் ஏற்பாட்டின்கீழ்

விதிக்கப்பட்ட எவையேனும் தேவைப் பாடுகளுக்கு அல்லது இச்சட்டத் தின்கீழ் ஆக்கப்பட்ட எவையேனும் ஒழுங்குவிதிகளுக்கு முரணாகச் செயற்படுகின்ற எவரேனுமாள் இச்சட்டத்தின்கீழான தவறொன் றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், நீதிவானொருவரின் முன்னரான சுருக்கமுறை விளக்கத் தின் பின்னர், அத்தகைய ஆள் -

(அ) கூட்டிணைக்கப்பட்ட குழு வொன்றாக, இல்லாதவிடத்து, முதலாவது தவறொன்றின் விடயத்தில், ஐயாயிரம் ரூபாவுக்கு குறையாததும் ஐம்பதாயிரம் ரூபாவை விஞ்சாததுமான குற்றப்பண மொன்றுக்கு அல்லது ஓராண்டை விஞ்சாத காலப் பகுதியொன்றுக்கான இருவகை யிலொருவகை மறியற்றண்ட னைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம் மற்றும் மறியற் றண்டனை ஆகிய இரண்டுக்கும், அத்துடன் அடுத்துப் பின்னரான தவறொன்றின் விடயத்தில், பத்தாயிரம் ரூபாவுக்குக் குறையாததுமான ஒரு இலட்சம் ரூபாவை விஞ்சாததுமான குற்றப்பண மொன்றுக்கு அல்லது இரண் டாண்டுகளை விஞ்சாத காலப் பகுதியொன்றுக்கான இருவகை யிலொருவகை மறியற்

றண்டனைக்கு அல்லது அத்த கைய குற்றப்பணம் மற்றும் மறியற்றண்டனை ஆகிய இரண் டுக்கும்; அத்துடன்

(ஆ) கூட்டிணைக்கப்பட்ட குழுவொன் றாக இருக்குமிடத்து, முதலாவது தவறொன்றின் விடயத்தில், ஐம்பதாயிரம் ரூபாவுக்குக் குறையாததும் ஒரு மில்லியன் ரூபாவை விஞ்சாததுமான குற்றப்பணமொன்றுக்கும் அத்துடன் அடுத்துப்பின்ன ரான தவறொன்றின் விடயத் தில், ஒரு இலட்சம் ரூபாவுக்குக் குறையாததும் இரண்டு மில்லி யன் ரூபாவை விஞ்சாததுமான குற்றப்பணமொன்றுக்கும்

ஆளாதல் வேண்டும்.''.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 83 ஆம் பிரிவைத் திருத்துதல்*

**45**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 83 ஆம் பிரிவு, ''வாகடகம் அல்லது தாதியியல்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''ஆயுள்வேத ஔடத உற்பத்தி, தாதியியல் அல்லது ஆயுள்வேத உடற்பிடிப்புச் சிகிச்சை,'' என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப் படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 89 ஆம் பிரிவைத் திருத்துதல்*

**46**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 89 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) ''ஆயுள்வேதம்'' என்னும் சொல்லமைப்பின் வரைவிலக் கணத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரு வதனை இடுவதன்மூலமும்-

''ஆயுள்வேதம்'' என்பது, ஆயுள்வேத மற்றும் சித்த மற்றும் யூனானி மற்றும் யோகா மற்றும் சுதேச மருத்துவ மற்றும் அறுவைச் சிகிச்சை முறைமைகளையும் அத்துடன் ஆசிய நாடுகளுக்கு சுதேசமாகவுள்ளவையும் அத்தகைய சம்பந்தப்பட்ட நாடுகளின் அரசாங்கங்களினால் ஏற்றங்கீகரிக்கப்பட்டவையுமான வேறேதேனும் மருத்துவ முறைமையையும் உள்ளடக்குகின்றது. என்பதுடன் ''ஆயுள் வேதம்'' எனும் சொல்லமைப்பு அதற்கிணங்க பொருளமைத்துக் கொள்ளப்படுதலும் வேண்டும்;'';

(2) ''ஆயுள்வேதம்'' என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன்மூலமும்:-

''ஆயுள்வேத ஆலோசக வைத்தியர்'' என்பது, இச்சட்டத்தின் கீழ் ஆயுள்வேத ஆலோசக வைத்தியரொருவராகப் பதிவுபெற்ற ஆளொருவர் எனப் பொருள்படும்;

(3) ''ஆயுள்வேத வாகடகம்'' என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன்மூலமும்:-

''ஆயுள்வேத தயாரிப்பு'' என்பது, விற்பனைக்காக உற்பத்திசெய்யப்பட்ட அல்லது சுத்திகரிக்கப்பட்ட ஏதேனும் ஆயுள்வேத பொருள், பதார்த்தம் அல்லது ஔடதம் எனப் பொருள்படும் என்பதுடன் உள்நாட்டில் உற்பத்திசெய்யப்பட்ட அல்லது இறக்குமதி செய்யப்பட்ட ஏதேனும் மருத்துவச் சாறு அல்லது கூறு, ஓர் ஆரோக்கிய குறைநிரப்பி, ஓர் உணவுக் குறைநிரப்பி, ஓர் ஒப்பனைப்பொருள் அல்லது ஒரு சாதனம் என்பவற்றையும் உள்ளடக்குகின்றது.;

(4) ''மருந்தகம்'' என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன்மூலமும்:-

''இலங்கை கிழக்கு பல்கலைக்கழகம்'' என்பது, 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 21 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்டதும், 1986 ஆம் ஆண்டு செத்தெம்பர் 26 ஆந்தேதிய 420/25 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான கட்டளையின்கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை கிழக்கு பல்கலைக்கழகம் எனப் பொருள்படும்;

''இலங்கை கொழும்பு பல்கலைக்கழகத்தின் சுதேச மருத்துவ பீடம்'' என்பது, 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் கீழானதும் 2023 ஆம் ஆண்டு பெப்ருவரி 13 ஆந்தேதிய 2319/22 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான கட்டளையினால் தாபிக்கப்பட்ட இலங்கை கொழும்பு பல்கலைக்கழகத்தின் சுதேச மருத்துவ பீடம் எனப் பொருள்படும்;

''இலங்கை கம்பஹா விக்கிரமாராச்சி சுதேச மருத்துவ பல்கலைக்கழகம்'' என்பது, 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்டதும் 2020, ஒற்றோபர் 28 ஆந்தேதிய 2199/12 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான கட்டளையின்மூலம் தாபிக்கப்பட்ட இலங்கை கம்பஹா விக்கிரமாராச்சி சுதேச மருத்துவ பல்கலைக்கழகம் எனப் பொருள்படும்;

''மூலிகைப் பயிர்ச்செய்கை' என்பது, பாரியளவில் மூலிகைச்செடிகளை வளர்க்கும் ஒரு செயல் எனப் பொருள்படும் என்பதுடன், பயிர்

அறுவடை அல்லது வர்த்தகரீதியிலான பெறுமானமொன்றைக் கொண்டுள்ள அத்தகைய வளர்ப்பின் எச்சங்கள் என்பவற்றை அது உள்ளடக்குதலும் வேண்டும்;

''ஆராய்ச்சிக்கும் மற்றும் விரிவாக்கலுக்குமான மூலிகைத் தோட்டங்கள்'' என்பது, ஒன்றில் ஆயுள்வேத திணைக்களத்தினால் அல்லது இச்சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்ட ஆளொருவரினால் ஆராய்ச்சி நோக்கங்களுக்காக மருத்துவத் தாவரங்களை வளர்ப்பதற்கென அர்ப்பணிக்கப்பட்ட ஒரு தனிப்பயனுடைய இடம் எனப் பொருள்படும்;

(5) ''சுதேச மருத்துவ வைத்தியசாலை'' என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தை உடனடுத்து பின்வரும் புதிய வரைவிலக்கணங்களை உட்புகுத்துவதன்மூலமும்:-

''மருத்துவ தாவரம்'' என்பது, அதன் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட கூறுகளில் சிகிச்சை நோக்கங்களுக்காகப் பயன்படுத்த முடியுமான பதார்த்தங்களைக் கொண்டுள்ள அல்லது பயன்மிக்க ஔடதங்களின் சேர்க்கைக்கான முன்னோடிகளாகவுள்ள ஏதேனும் தாவரம் எனப் பொருள்படும்;

''அமைச்சர்'' என்பது, அரசியலமைப்பின் 44 ஆம் அல்லது 45 ஆம் உறுப்புரையின்கீழ் ஆயுள்வேதம் என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சர் எனப் பொருள்படும்;

(6) ''ஆயுள்வேத மருத்துவ தொழிலர்களின் இடாப்பு'' என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலமும்:-

"ஆயுள்வேத மருத்துவத் தொழிலர்களின் இடாப்பு" என்பது, ஆயுள்வேத மருத்துவத் தொழிலர்களின் பதிவுக்காக இச்சட்டத்தின்கீழ் ஆயுள்வேத மருத்துவப் பேரவையினால் பேணப்படும் பொது இடாப்பு அல்லது விசேட இடாப்பு அல்லது ஆலோசக வைத்தியர் இடாப்பு எனப் பொருள்படும் என்பதுடன், 51 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின்கீழ் ஆயுள்வேத மருத்துவத் தொழிலர்களின் பொது இடாப்பொன்றாக அல்லது ஆயுள்வேத மருத்துவத் தொழிலர்களின் விசேட இடாப்பொன்றாக அல்லது ஆயுள்வேத மருத்துவத் தொழிலர்களின் ஆலோசக வைத்தியர் இடாப்பொன்றாக இருப்பதாகக் கருதப்படுகின்ற ஏதேனும் இடாப்பொன்றையும் அது உள்ளடக்குகின்றது;

(7) "பதிவுபெற்ற ஆயுள்வேத மருத்துவத்தொழிலர்" என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தை உடனடுத்து பின்வரும் புதிய வரைவிலக்கணங்களை உட்புகுத்துவதன்மூலமும்:-

"பதிவுபெற்ற ஓர் ஆயுள்வேத ஆண் உடற்பிடிப்பாளர் அல்லது பெண் உடற்பிடிப்பாளர்" என்பது, இச்சட்டத்தின்கீழ் ஓர் ஆயுள்வேத ஆண் உடற்பிடிப்பாளராக அல்லது பெண் உடற்பிடிப்பாளராக பதிவுசெய்த ஆளொருவர் எனப் பொருள்படும்;

"ஆயுள்வேத ஆலோசக வைத்தியர் இடாப்பு" என்பது, இச்சட்டத்தின்கீழ் ஆயுள்வேத ஆலோசக வைத்தியர்களின் பதிவுக்காக ஆயுள்வேத மருத்துவப் பேரவையினால் பேணப்படும் இடாப்பு எனப் பொருள்படும்;

"ஆயுள்வேத ஆண் உடற்பிடிப்பாளர் அல்லது பெண் உடற்பிடிப்பாளர் இடாப்பு" என்பது, இச்சட்டத்தின்கீழ் ஆயுள்வேத ஆண்

உடற்பிடிப்பாளரின் அல்லது பெண் உடற்பிடிப்பாளரின் பதிவுக்காக ஆயுள்வேத மருத்துவப் பேரவையினால் பேணப்படும் இடாப்பு எனப் பொருள்படும்;

"இலங்கை கொழும்பு பல்கலைக்கழகம்" என்பது, 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 139 ஆம் பிரிவின்கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை கொழும்பு பல்கலைக்கழகம் எனப் பொருள்படும்;

"இலங்கை யாழ்ப்பாண பல்கலைக்கழகம்" என்பது, 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக் கழகங்கள் சட்டத்தின் 139 ஆம் பிரிவின்கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை யாழ்ப்பாண பல்கலைக் கழகம் எனப் பொருள்படும்;

ஐயத்தைத் தவிர்த்தல்

**47**. ஐயத்தைத் தவிர்ப்பதற்காக, இச்சட்டத்தின் ஏற்பாடுகள், இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு முன்னர் முதன்மைச் சட்டவாக்கத்தின்கீழ் முன்னரே செய்யப்பட்ட ஏதேனும் செயலை அல்லது அதன்கீழ் முன்னரே எடுக்கப்பட்ட ஏதேனும் முடிபை பாதித்தலாகாது அல்லது பாதித்துள்ளதாகக் கருதப்படுதலாகாது.

ஒவ்வாமையின் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கிநிற்றல்

**48**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கிநிற்றல் வேண்டும்.